# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942௵ ஜூலை௴ 4௳ [ந. 102


பிரஸங்கம் CII.

## பிரிடிஷ் குடியேற்ற நாடுகளும், மற்ற உலகமும்.

### ஆக்ஸ்போர்டு மாணவர் சங்கத்தின் முன்பாக இந்தியா மந்திரி மிஸ்ட்டர் L. S. அமெரி செய்த பிரசங்கம்.

(*'19-வது நூற்றாண்டும், அதன் பிறகும்'* என்ற பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது).

---

### எதற்காக நாம் சண்டையிடுகிறோம்.

நமது யுத்த நோக்கங்களைப்பற்றி விஸ்தாரமாகச் சர்ச்சை செய்வதற்கு இது சமயம் அல்ல. வெற்றி கிடைப்பதற்கு முன் பலவிதமான கஷ்டங்களை நாம் அனுபவிக்க வேண்டிவரும். ஆகவே நமது முயற்சிகளெல்லாம் கஷ்டங்களிலிருந்து சமாளித்து வரும் விஷயத்திலேயே ஈடுபட்டிருக்க வேண்டும். இருந்தாலும் சில பொதுவான கேள்விகளை நாமே கேட்டுக்கொண்டு அவைகளுக்குத் தகுந்த மறுமொழிகளையும் கொடுப்போம். எதற்காக நாம் சண்டையிடுகிறோம்? எதை எதிர்த்து நாம் போராடுகிறோம்? இந்த யுத்தம் முடிந்ததும் அதன் முடிவு எவ்வாறு நீடித்திருக்கும்? என்பவை சில பெரும்படியான கேள்விகளாகும்.

### ஸ்வதந்திரத்திற்காகப் போராடுகிறோம்.

பொதுவாகச் சொல்லுகையில் ஸ்வதந்திரம் பெறவேண்டுமென்றும், வலியார்களிடம் வசப்படாமல் அந்தந்த நாடுகளுக்கு ஏற்றவாறு பத்திரமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும், நினைப்பது, பேசுவது, அரசியல் திட்டம் முதலியவைகளில் ஸ்வதந்திரம் பெறுவதற்கும், மத சம்பந்தமான ஸ்வதந்திரத்தை அடைவதற்கும் நாம் சண்டைசெய்கிறோம். ஆகவே இவ்வித சண்டையில் நம்முடன் தோளோடு தோள் கொடுத்து ஸ்வதந்திரத்தை விரும்பும் பல நாடுகள் இருக்கின்றன. அதோடு நமது வாழ்க்கையில் அதிகப் பற்றுதல் கொண்டும், இங்கிலாந்து, குடியேற்ற நாடுகள் முதலியவைகளின் பழக்க வழக்கங்களுக்குத் தகுந்தவாறு ஒரு ஸ்வதந்திரத்தையடையவேண்டுமென்றும் நாம் சண்டை செய்கிறோம் என்று சொல்லுவது பொருத்தமானதாகும். இங்கிலாந்து எவ்வித ஸ்வதந்திரத்தைப் பெரிதாக நினைத்துக்கொண்டிருக்கிறதோ அதே ஸ்வதந்திரத்தைத்தான் குடியேற்ற நாடுகளும் கருதுகின்றன. நாம்

விரும்பும் ஸ்வதந்திரம் கேவலம் வாய்மொழிகளில் மாத்திரமல்ல, அல்லது ஸ்வதந்திரத்தை சம்பாதித்துக் கொடுப்பதாகச் சொல்லி ஜனங்களை ஏமாற்றி அவர்களின் ஓட்டுச் சங்கியை எடுப்பதற்காகவுமல்ல. நமது ஸ்வதந்திரம் ஜீவனுடன் கூடியிருக்கிறது. பல நூற்றூண்டுகளாக இருந்துவரும் பழக்கத்தையும், மனப்பான்மையையும் உட்கொண்டிருக்கிறது. எவ்வளவோ நூற்றூண்டுகளுக்குமுன் ஏற்பட்ட நார்மன் சட்ட திட்டங்களை (Norman Law) அடிப்படையாகக் கொண்டுள்ளது. அவ்வித சட்ட திட்டங்கள் மாக்னு கார்டா (Magna Charta) என்ற சாஸனத்தில் வற்புறுத்தப்பட்டிருக்கிறபடி ஸ்வதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காகவே ஏற்பட்டது. இவ்வித சட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டு நமது ஸ்வதந்திர அரசாங்கம் விருத்தியடைந்திருக்கிறது. இந்த அரசாங்கம் நாட்டில் வழங்கும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடந்துகொள்ளும். ஜனங்களின் அனுமதியில்லாமல் அந்த சட்டதிட்டத்தில் ஒருவித மாறுதலையும் செய்யமுடியாது. இவ்வித கொள்கைகளைத்தான் பிரிடிஷ் மக்கள் சென்ற இடங்களுக்கெல்லாம் எடுத்துச் சென்றிருக்கின்றனர். அடிப்படையான அம்சத்தையும், விருத்தியடைந்த அம்சத்தையும் எடுத்துக்கொண்டு அயல் நாடுகளுக்குச் சென்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. ஸ்வதந்திர அரசாங்கம் இல்லாத சில இடங்களில அடிப்படையான நீதி முறை, ஸ்தாபிக்கப்பட்டும், பின்னுடி விருத்தியடையக்கூடிய சுய ஆட்சியும், பிரதிநிதி ஆட்சியும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

## குடியேற்ற நாட்டுக்கொள்கை.

இந்த வியாசத்தின் தலைக்குறிப்பில் 'குடியேற்ற நாடுகள்' என்று போடப்பட்டிருக்கிறது. இவ்வித வார்த்தையைப் போடும்போது 'பிரிடிஷ் சாம்ராஜ்யம்' என்ற அழகிய பழைய வார்த்தையைப் போடுவதற்கு வெட்கப்பட்டுக்கொண்டு இப்புதிய வார்த்தையை நான் போடவில்லை. ஆனுல் 'குடியேற்ற நாடு' என்ற பதம்தான் சாம்ராஜ்யத்திலுள்ள சுய ஆட்சி பொருந்திய நாடுகளின் ஒற்றுமையான அம்சத்தைத் தெரியப்படுத்துகிறது. மேலும் உலகத்தின் வருங்காலத்தைப்பற்றி நமது அபிப்பிராயத்தை நன்ருகத் தெரியப்படுத்துகிறது. மேலும் இங்கிலாந்துக்கும், குடியேற்ற நாடுகளுக்குமுள்ள சம்பந்தத்தைத் தெரியப்படுத்துவதோடு அவ்வித சம்பந்தத்தின் விசேஷ அம்சத்தையும் தெரியப்படுத்துகிறது. பிரிடிஷ் சாம்ராஜ்யத்தைத் தவிர இதர பாகங்களிலும் சிறிய நாடுகள் ஒன்று சேர்ந்து ஸ்வதந்திரத்துடன் இருப்பதாக நீங்கள் நினைக்கலாம். ராஜரீக முறைகளைத் தள்ளுபடி செய்து ஒரு பொதுவான புதிய அரசாக்ஷிக்கு உட்பட்டுமிருக்கின்றன. ஆக இந்த முறை சரியானதென்றே யாவரும் நினைக்கக் கூடியதாக இருக்கிறது. இந்த சிறிய நாடுகள் ஒன்றுக்கொன்று சமீபத்தில் இருக்குமிடங்களில் மிகவும் நன்ருகவே நடந்துகொண்டும் வருகின்றன. இவ்வளவு சௌகரியங்களிருந்தாலும், நாடுகள் தூர தூரமாக அமைந்திருந்தாலும், வேறுபட்ட பொருளாதார நிலைமையாலும், அதிகமான தேசீய உணர்ச்சியாலும், பலவித சிருங்கலைகள் உண்டாகின்றன. உதாரணமாக கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளோடு நியூ பவுண்லாந்தும் நியூஸிலாந்தும் சேரவில்லை. என்னுடைய பால்யத்தில் சிலர் எல்லா நாடுகளும் அடங்கிய ஸர்வ சாம்ராஜ்யம் என்ற கொள்கைகளைச் சொல்லியும் வந்தனர். உண்மையில் நாம் ஒரு விதமாக இருந்து வருகிரும். பல நாடுகளை ஒன்று சேர்த்துக் கொண்டு சக்ரவர்த்திக்கு உட்பட்டு நடந்துவருகிரும். இதுவே நமது கொள்கைகள், பழக்க வழக்கங்கள் இவைகளின் ஒற்றுமைக்கு அடையாளமாக இருக்கிறது. அப்படியிருந்தும் அவரவர்களின் விருப்பப்படி பந்தகங்கள் ஒன்றுமில்லாமல் தினசரி வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிரும். ஆக பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடு என்பது யாவருடைய க்ஷேமத்தை முன்னிட்டும் பத்திரத்தை முன்னிட்டும் ஒன்று சேர்ந்த ஸ்வதந்திர சங்கமாகும். இவ்வித ஒற்றுமை நீடித்திருக்குமா என்பதும், ஒருவித அரசியல் அமைப்புமில்லாத இத்திட்டம் யுத்த காலத்திலோ, பிறகு சமாதானம் வந்த பிறகோ நிலைத்திருக்குமா என்ற விஷயமும் பின்னுடித்தான் தெரியவரும். அப்ரஹாம்லின்கன் சொன்னபடி இந்தப் பெரும் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் எல்லா பிரிடிஷ் குடியேற்ற நாடுகளும் வெகுகாலம் நீடித்திருக்குமென்று நிச்சயம் சொல்லலாம்.

## எதை எதிர்த்துப் போராடுகிறோம் ?

இந்த பிரிடிஷ் குடியேற்ற நாடுகள் எதை எதிர்த்துப் போராடுகின்றன? ஆக்கிரமணம், அதிகார ஆசை, மிருகத்தன்மை, கொடுமை, கிருஸ்துவ நாகரீகத்திலுள்ள கொள்கைகளை மறுப்பது, மதம், தர்மம், முதலியவைகளினால் விருத்தியடைந்த நாகரீகத்தை ஒழிப்பது, முதலிய விஷயங்களில் ஈடுபட்டவர்களை எதிர்த்துப் போராடுகிறோம். ஆனால் இக்காரியம் சுலபமானதல்ல. அதர்மத்தை மாத்திரம் எதிர்த்து சண்டை செய்தால் நமக்கு இவ்வளவு சிரமம் ஏற்படாது. உலகப் புரட்சியை எதிர்த்து சண்டை செய்கிறோம். இவ்வித புரட்சியானது விசித்திரமாகத் தோன்றி யாவற்றையும் அழிப்பதில் முயற்சி கொண்டிருக்கிறது. ஆங்காங்கு சில புரட்சி ஸ்தலங்கள் ஏற்பட்டு சிற்சில தேசிய நோக்கங்களை மாத்திரம் முக்கியமாகக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும் உலகம் பூராவும் பரவி வருகிறது. நாம் எதிர்த்துப் போராடும் இப்புரட்சியை அரசியல் புரட்சியென்றும், கைத்தொழில் புரட்சியென்றும் சொல்லலாம். மற்ற புரட்சிகளைப்போல் அரசியல் புரட்சி என்பது புஸ்தகங்களைத் தானாகப்படித்து அபிப்பிராயம் கொள்ளுவதாலும், சொற்பொழிவுகளைக் கேட்பதாலும் ஏற்படக்கூடியது. கொஞ்சம் கொஞ்சமாக குதர்க்கமான வியாக்யானங்களைச் செய்துகொண்டு சர்வதேசங்களுக்கும் பரவுகின்றது. நான் சொல்லும் இவ்வபிப்பிராயத்தை நன்றாகத் தெரிந்து கொள்வதற்கு 150 வருஷங்களுக்கு முன்பு நடந்த பிரெஞ்சுப் புரட்சியை நினைத்துக்கொள்வது நலம். முதலில் சாவதானமான நிலைமையில் ஆரம்பித்து பிறகு உக்கிரமான முறைக்கு மாறிவிட்டது. இதற்குக் காரணமாக பிரெஞ்சுக் கவிகளும், நிபுணர்களும் காரணவாதம். (Rationalist) தனிப்பட்ட கொள்கை (Individualist) முதலியவைகளைப்பற்றி விஸ்தாரமான கிரந்தங்களை எழுதியிருந்தார்கள். பிரெஞ்சுப் புரட்சியின் அமளி ஒழிந்ததும், கௌரவமான (Liberalism) பெருந்தன்மையுள்ள கொள்கைகள் ஏற்பட்டன. இந்த சந்தர்ப்பத்தில் காரணவாதம், தனிப்பட்ட கொள்கை இவைகளை எதிர்த்ததால் ஏற்பட்ட மாறுதலாலும் ஹெகல் (Hegel) என்பவரின் வேதாந்த தத்துவங்களாலும், சரித்திரம், சரீரம், இவைகளில் ஏற்படக்கூடிய மாறுதலாலும், சமூகத்தின் தன்மையே புதுவிதமாக அமைந்தது. புராதனமான பழக்க வழக்கங்களில் ஒரு பிராதான்யமும், கோவில், குளம், போன்ற மத அடையாளங்களின் முக்கியத்துவமும், அனுபவத்திற்கெட்டாத வெட்டிப் பேச்சின் பயனற்ற தன்மையும் நன்றாகப் புலப்பட்டன. ஐரோப்பாவில் லிபரல் கொள்கைகளைக் கொண்ட ஜனநாயகங்களுக்கும் சமரச உரிமையைப் பிரதானமாகக் கொண்ட நாடுகளுக்கும் ஒன்றுக்கொன்று ஒற்றுமை ஏற்படாததால் ஏகாதிபத்திய ஆட்சிகள் பல கிளம்பின. பலமில்லாதவர்களை அடக்கி, காட்டுமிருண்டிகளில் காணக்கூடிய பலிஷ்டர்களின் ஆட்சி கிளம்பியது. பிரஷ்யா தேசத்து ராணுவ சம்பராதாயத்தையும் விசித்திரமான ஜாதி, மதக்கொள்கைகளையும் சேர்த்துக்கொண்டு ஏற்கனவேயடைந்த அவமானமான தோல்வியை ஈடுசெய்வதற்கான நோக்கத்துடனும், வேலையில்லாத் திண்டாட்டம் முதலிய தீங்குகளை ஒழிப்பதற்காகவும் ஜெர்மன் புரட்சி ஆரம்பித்தது. இதற்கு மூலகாரணமாக ராபஸ்பீரி (Robespierre) நெபோலியன், இருவர்களையும் ஒன்றாகச் சேர்த்து செய்யப்பட்டவன் போலுள்ள அடால்ப் ஹிட்லர் தான். இந்தப் புரட்சியைப்பற்றி சொல்லும்பொழுது தொழில் சம்பந்தமான புரட்சியையும் சேர்த்துச் சொல்லவேண்டியிருக்கிறது. பிரெஞ்சுப் புரட்சி ஏற்படும்போது சாமான்களின் உற்பத்தி, போக்குவரவு முதலியவைகளில் புதிதாக ஒன்றும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் திசைகாட்டும் கருவியும், அதன் உபயோகத்தினால் அமெரிக்காவும்தான் கண்டுபிடிக்கப்பட்டன. அதற்குப் பிறகு (Industrial Revolution) தொழிற்சாலை புரட்சி ஏற்பட்டது. அதன் பயனாக உலகத்தில் பல பாகங்களிலுள்ள மூலப்பொருள்களைக் கப்பல், ரயில்வே முதலியவைகளின் உதவியால் பலவழிகளில் உபயோகப்படுத்த முடிந்தது. இவைகளின் பயனாக சென்ற நூற்றாண்டின் கடைசியில் பணக்கார வியாபாரிகளின் கூட்டம் ஸ்தாபிக்கப்பட்டது. புதிதாக ஏற்பட்ட தொழில் புரட்சியின் பயனாக ஏராளமான சாமான்கள் உற்பத்திசெய்யப்படுகின்றன. விமானம், ரேடியோ முதலியவைகளின் உபயோகம் நன்றாகக் கண்டுபிடிக்கப்பட்டது. பிரசாரம்

பலமாகச் செய்யப்படுகிறது. ஆகவே பொருளாதாரம், யுத்த சக்தி இவைகளில் அதிகம் பலம் பெற்றிருப்பதோடு திட்டமாயும், சில முறைகளுக்கு உட்பட்டும் அரசாங்கம் நடத்தப்படுகிறது. இவ்விதமான சாதகங்களுடன் தீவிரமான ஒற்றுமையும், ஏகாக்ரமான லக்ஷியமும் கொண்ட நாடுகளை எதிர்த்து நாம் போராடுகிறோம்.

### சுயேச்சையாக நடக்கும் குடியேற்ற நாடுகள்.

இந்த சந்தர்ப்பத்தில் நமது சமூகம், அரசியல் இவைகளை 19-வது நூற்றாண்டிலிருந்து (laisser faire) பொதுமக்களின் விஷயங்களில் தலையிடாமலிருப்பது என்றபடி அமைத்துக் கொண்டிருக்கிறோம். யுத்தம் வந்தவுடன் நமது சமூகத்தை நிலைமைக்குத் தக்கவாறு மாற்றிக்கொள்ள சிரமப்படுகிறோம். ஆனால் ஜெர்மனி, ஜப்பான், ருஷ்யா போன்ற நாடுகள் எவ்வளவோ வருஷங்களுக்கு முன்னால் அமைத்துக்கொண்டுவிட்டன. முன்சொன்ன நிலைமை இங்கிலாந்திலேயே இருக்கிறதென்றால் பிரிடிஷ் குடியேற்ற நாடுகளில் இன்னும் அதிகமாகக் காணப்படுகிறது. ஏனென்றால் குடியேற்ற நாடுகள் எல்லாம் (laisser faire) திட்டப்படிதான் அமைந்துள்ளன. ட்ரபால்கர் சண்டையில் அடைந்த கடலாதிக்கத்தின் பயனாக வியாபாரமே அதிகமாக நடந்துவந்தது. அவ்வித கடலாதிக்கம் குறைந்துவிடுமென்றாவது குடியேற்ற நாடுகள் எதிரிகளிடமிருந்து தங்களைப் பிரத்தியேகமாகக் காப்பாற்றிக்கொள்ள லாயக்காகும்படி தற்காப்பு செய்யப்படவேண்டுமென்றாவது நாம் அதிகம் நினைக்கவில்லை. ஜப்பானுக்கு அருகிலேயே ஆஸ்திரேலியா இருந்தும், நவீன வசதிகளைக் கொண்டு தன்னுடைய பாதுகாப்பிற்காகவும், பொருளாதாரத்தில் சிரமமேற்படாமலிருக்கவும், தனது மூலப் பொருள்களை தகுந்தபடி உபயோகிக்க வேண்டியது அவசியமென்று ஆஸ்திரேலியா கருதவில்லை. ஆனால் தனிப்பட்ட வியாபாரிகளும் குடியேறுகிறவர்களும் அதிக லாபம் அடையும்படியாகவே சட்டதிட்டங்களைச் செய்துகொண்டு வந்தது.

### சாம்ராஜ்யம்.

இவ்விதமாகக் குடியேற்ற நாடுகளும் சாம்ராஜ்ய நாடுகளும் நடந்து வந்ததற்கு நாமே முக்கிய காரணம். ஏனென்றால் நமது புத்திக்குத் தகுந்தவாறும் நமது அரசியல் நோக்கத்துக்குத் தகுந்தவாறும் தான் நாம் நடந்து வந்தோம். இவ்விதம் நடந்து வந்ததைப்பற்றி வெட்கப்படுவதில் பிரயோஜனமில்லை. தூரக் கிழக்கில் தோல்வி வந்தவுடன் பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு திட்டத்தில் குறை கூறுவது சகஜமாகிவிட்டது. இந்த சந்தர்ப்பத்தில் ஹாங்காங், சிங்கப்பூர் போன்ற இடங்களை நாம் அடைந்ததைப் பற்றி கொஞ்சம் ஞாபகப்படுத்துகிறேன். ஒரு நூற்றாண்டுக்கு முன்பு, விளைச்சலில்லாததுமான, சில செம்படவர்கள் வசித்து வந்ததும், சகதிப் பாங்கான இடத்தைப் பிரிடன் அடைந்தது. பிரிடனின் ஒழுங்கான அரசியல் முறையால் உலகத்தின் பல பாகங்களிலிருந்தும், இங்கிலாந்திலிருந்தும் உத்ஸாகமாக சிலர் வந்தனர். பணத்தைச் செலவு செய்து தொழில் முறையையும் ஆரம்பித்தனர். லாபகரமான காரியங்கள் செய்யப்பட்டன. மலேயாவில் பிரிடனின் பாதுகாப்பில் கொள்ளை, உள்நாட்டுக் கலகம் முதலியவைகள் அடக்கப்பட்டன. பழக்க வழக்கங்களை நாம் கெடுக்காமலிருந்ததால் மலேயர்களுடன் ஐரோப்பிய ஜாதியினர் பலரும், சீனர்களும், இந்தியர்களும் பிரியமாக ஒத்துழைத்து வந்தனர். இவர்கள் யாவரும் மத சம்பந்தமான தகராறுகள் ஒன்றுமில்லாமல் சந்தோஷமாகவே வாழ்க்கையை நடத்தி வந்தனர். ஆனால் சண்டைக்கு லாயக்காக அவர்களை நாம் தயார் செய்ய வில்லை. ராணுவப் பயிற்சியை வற்புறுத்த வில்லை. வரி விகிதங்களை அதிகம் போட வில்லை. (சிங்கப்பூரிலும், மலேயாவிலும் தாங்களாகவே சிலர் முன் வந்து பணம் கொடுத்தனர்). ஏதோ நம்மால் அந்நாட்டின் பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்து வைத்திருந்தோம். இவ்விதம் செய்து வந்த திட்டத்தைப் பற்றி நாம் கௌரவமாகவே தான் நினைக்க வேண்டும். ஆனால் இப்பொழுது ஏற்படும் ஆபத்தைப்பற்றி நாம் முன்னால் யோசித்திருக்கலாம். இது இவ்வாறு இருக்க பிரிடிஷ் சாம்ராஜ்யத்தில் ராணுவ ஆட்சியும், அடக்கு முறையும் அதிகமாக இருந்ததாகச் சொல்லி இப்பொழுது மலேயர்களுக்கு ராணுவப் பழக்கமும், யுத்தத்தைப் பற்றிய நினைப்பும்

ஏற்படவில்லையென்று சொன்னால் அவ்வார்த்தை பொருத்தமாக இருக்காது. அல்லது சுய ஆட்சி கொடுத்திருந்தால் அதனால் சில மாறுதல்கள் ஏற்பட்டிருக்கிற தென்று சொல்லுவதும் பிசகாகும். ஸயாம், டெனமார்க் இவைகளை எடுத்துக் கொண்டால், இவைகளுக்கு சுய ஆட்சியிருக்கிறது இருந்தாலும், தேசத்தின் பாதுகாப்பைப் பற்றி ஜனங்களே அதிகக் கவலை எடுத்துக் கொள்ளாவிட்டால் சுய ஆட்சி மட்டில் என்ன விதமாக உதவும்.

## இந்தியா.

இதே விதமாகத்தான் இந்தியாவும் நமது வசம் வந்தது. பலாத்காரமாக சண்டை செய்து நாம் அடையவில்லை. ஏதோ சில உள்நாட்டுப்படையின் உதவியைக்கொண்டு நமது சாம்ராஜ்யம் அங்கே ஸ்தாபிக்கப்பட்டது. மக்களால ஒப்புக்கொள்ளப்பட்டதால் மீண்டும் விருத்தியடைந்தது. அது இந்தியத் துருப்புகளின் உதவியினாலேயே அங்கே சமாதானம் நிலவிவருகிறது. யுத்த ஆரம்பத்தில் இந்தியச் சைனியத்தின் எண்ணிக்கை 2,30,000, அதாவது 1,500 மக்களுக்கு ஒரு சிப்பாய் வீதமாகிறது. 6,000 மக்களுக்கு ஒரு பிரிடிஷ் ஸோல்ஜர் வீதமும் இருந்தது. ஆனால் இந்தியாவின் ராணுவ அமைப்புக்காக ஏராள மாகச் செலவழிக்கப்படுகிறதாகக் குறைகூறப்பட்டது. மிகவும் ஏழை தேசமான இந்தியாவிலிருந்து அதிகமாக நாம் பணம் பெறுகிறோமோ என்ற சந்தேகம் நமக்கு ஏற்பட்டதுமுண்டு. இந்த யுத்தம் ஆரம்பிப்பதற்கு சற்றுமுன்பு இந்தியச் சைனி யத்தை சில யந்திர சாதனங்களுடன் அமைக்கும் பிரச்னை உண்டாயிற்று. அதற்காக நாம் கொஞ்சச் செலவைச் செய்யவேண்டி வந்தது. யுத்தம் வந்ததும் நமக்கே போதுமான யுத்த தளவாடங்களில்லை. யுத்த தளவாடங்களைச் செய்வதற்கான வசதிகளும் இல்லை. இருந்தாலும் கொஞ்சம் கொஞ்சமாக யுத்த சாமான்களும், யந்திரக் கருவிகளும், தொழிற்சாலை நிபுணர்களும், அனுப்பப்பட்டு இந்தியச் சைனியம் விருத்திசெய்யப்பட்டது. முன்பு இந்த உதவியையும் சாமான்களின் உற்பத்தியில் ஏற்பட்ட சிரமத்தையும் கவனித்தால் சைனியத்தின் விருத்திக்காகவும், பயற்சிக்காகவும் இந்திய அரசாங்கத்தார் பிரமாதமாகச் சாதித் திருக்கின்றனர். சில வருஷங்களுக்கு முன்பு இந்திய மக்கள், ராணுவ விஷயமாக செலவு செய்வதாகக் குறைகூறியது போக, லக்ஷக்கணக்கான சிப்பாய்களைத் தயார் செய்துவிடலாம் என்று சொல்லிவருகிறார்கள். இதிலுள்ள தாரதம்மியத்தை கவனித்துப்பாருங்கள்.

## வருங்காலம்.

எப்படியாவது நாம் வெற்றியடைவோம். ஆனால் அத்துடன் நமது வேலை முடிந்துவிடாது. பிரெஞ்சுப் புரட்சியும், நெபோலியனுடைய ராணுவ சக்தியையும் அடக்கியதுபோல ஜெர்மனி, ஜப்பான் இவைகளின் வீரியத்தைக் குறைப்போம். தற்சமயம் நம்மால் ஸ்தாபிக்கப்படும் அம்சங்களெல்லாம் மீண்டும் வேலை செய்து கொண்டுதானிருக்கும். நான் சொல்வதெல்லாம் பொருளாதாரம், ராணுவம் இவைகளைப்பற்றித்தான். படைகளுக்குவேண்டிய ஆயுதங்களும், பொதுமக் களுக்கு வேண்டிய உணவும் அதிகம் விருத்திசெய்யப்படும். இதுவரை கையினால் செய்யப்பட்டு வந்த சாமான்கள் யந்திரங்களினால் செய்யப்படுவது போல, அரசாங்கத்தாரும், பொதுமக்களும் ஒன்று சேர்ந்து சமாதான காலத்திலும் சண்டை காலத்திலும் விஷயங்களை ஒழுங்குப்படுத்தவேண்டும். இப்படிச் சொல் வதால் ஏகாதிபத்ய ஆட்சி வசத்தில் உலகத்தை ஒப்புவிப்பதாகக் கருதக்கூடாது. ஆனால் ஸ்வதந்திர மக்கள் தாங்களாக தங்களுடைய நன்மையை முன்னிட்டு செய்துகொண்ட காரியம்தான் நீடித்திருக்குமென்று நான் சொல்லுகிறேன்.

## பல நாடுகளின் சேர்க்கை.

தற்போது உண்டாயிருக்கும் பிரச்னையாதெனில் ஒரு தேசத்தின் அரசியல், ஜனங்கள் இவர்களுக்குள் காணப்படும் சம்பந்தத்தைவிட அதன் விஸ்தீரணம் எவ்வாறு இருக்கிறதென்பது தான். சிறிய நாடுகளாக இருந்தால் விமான பலம் கொண்ட நாடுகளால் அரைமணி நேரத்திற்குள் அழிக்கப்படுகின்றன. அதே வித மாக பொருளாதாரத் துறையிலும் சாமான்களின் உற்பத்தி அதிகமாகச் செய்யு

வேண்டுமானல் அதற்காக மூலப்பொருள்களின் உற்பத்தி அதிகம் இருக்கவேண்டும். எந்த தேசம் பெரிதாக இருக்கிறதோ அந்த தேசத்திற்குத் தான் சிரமம் குறைவு. அங்கு வசிப்பவர்களுக்கும் அதிக ஸ்வதந்திரம் கிடைக்கும். உதாரணமாக அமெரிக்காவை எடுத்துக்கொண்டால், அதன் விஸ்தீர்ணமும் விளைபொருள்களின் உற்பத்தியும் மிக அதிகம். அதனாலேயே அதன் ஸ்வதந்திரத் தன்மையை நிலை நாட்டிக்கொள்ளமுடிகிறது.

## ஒத்துழைப்பதும், ஆக்கிரமணமும்.

இந்த யுத்தத்திற்கு முன்பு தன்னால் நிலைநாட்டிக்கொள்ள முடியாத சிறு நாடுகளை ஒன்று சேர்ப்பதிலேயே அதிக கவனம் செலுத்தப்பட்டது. இதற்காக ஹிட்லரின் புதிய திட்டத்தின் படிக்கும், ஜப்பானின் பொது க்ஷேம திட்டத்தின் படிக்கும் ஆக்கிரமண முறை கையாளப்படுகிறது. இதைத்தவிர சம அந்தஸ்து கொடுத்து ஒத்துழைப்பது என்ற மற்றொரு முறையும் இருக்கிறது. பின்னால் சொல்லப்பட்ட ஒத்துழைப்பு முறையால் ஒரு கட்டுப்பாடான ஒற்றுமையை ஸ்தாபிக்க முடியும். அல்லது குடியேற்ற நாடு கொள்கையையாவது ஸ்தாபிக்க முடியும். அதைத்தான் நாம் ஸ்தாபித்து வந்திருக்கிறோம். யுத்தத்திற்குப் பின்பு பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் தன்மை தான் மிஞ்சியிருக்கும். வருங்காலத்தில் அதற்கு ஒரு நாளும் அழிவு கிடையாது.

இவ்விதம் அது நிலைத்திருக்கவேண்டுமானல் அதற்கு சில நிபந்தனைகளை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். முதலாவதாக அதில் சேர்ந்துள்ள நாடுகள் ஒவ்வொன்றும் தன்னுடைய உள்நாட்டு வாழ்க்கையை பலமாக அமைத்துக்கொள்ள வேண்டும். நாமும் நமது சமூகம், பொருளாதார வாழ்க்கை இவைகளில் சில சீர்திருத்தங்களைச் செய்யவேண்டும். இப்படிச் செய்வதால் நமது ஸ்வதந்திரத் துக்கும், தேசீய வாழ்வுக்கும், அதில் சேர்ந்துள்ளோரின் நன்மைக்கும் ஒரு தீமையும் ஏற்படாது. எல்லாக் குடியேற்ற நாடுகளுக்கும் இதுதான் வழி. இந்தியாவிற்கும் இதுதான் வழி. இந்தியாவின் வருங்கால பிரச்னைகளின்படி வாழ்க்கையின் திட்டத்தை உயர்த்திக்கொண்டு சீர சௌக்யத்தையும் அதிகாரத் தையும் பெறவேண்டும். நல்ல உணவு, தொழிற்சாலை முன்னேற்றம், விவசாயத் தில் முன்னேற்றம், படிப்பு இவைகளே யுத்தத்திற்குப் பின்பு கவனிக்கவேண்டிய விஷயங்களாகவும். இரண்டாவதாக யுத்தத்தில் நாம் தனியாக நிலைத்திருப் போமேயானல் முன்னிருந்ததைவிட அதிகமான ஸ்வதந்திரத்துடன் ஒத்து ழைக்கப்படவேண்டும். பாதுகாப்பு, வியாபாரம், மூலப்பொருள்களின் உற்பத்தி இவைகளில் எல்லாவற்றிலும் யாவரையும் கலந்துகொண்டு ஒரு சகஜமான ஒத்துழைப்புவேண்டும். அப்படி செய்தால் நமது சாம்ராஜ்யம் மிஞ்சியிருப்ப தோடு, மேலும், மேலும் ஓங்கி வளரும். உலகத்திற்கு ஒரு திருஷ்டாந்தமாக விளங்கலாம்.

## மனித வர்க்கத்தின் சேர்க்கை.

இவ்வித சாம்ராஜ்ய கொள்கையை விட்டுவிட்டு, அமெரிக்கா போன்ற ஜன நாயக நாடுகளுடன் சேர்ந்துகொள்ளலாம் என்று சிலர் சொல்லலாம், இது சாத்தியமாகாதென்றே நான் நினைக்கிறேன். ஏனென்றால் நமது பழக்க வழக்கங் கள் 160 வருஷ காலமாகவே மாறிக்கொண்டு வருகிறது. அவ்வித சேர்க்கையில் பிரிடனையும், ஐரோப்பியரடங்கிய குடியேற்ற நாடுகளையும் சேர்த்துக்கொண்டால் இந்தியாவையும் இதர நாடுகளையும் சேர்ப்பது சிரமமாகும். அதாவது சாம்ராஜ்யமே முறிந்துவிடும். ஏனென்றால் புராதனமான மதச்சின்னங்களும், கொள்கைகொண்ட வெவ்வேறு ஜாதியினருக்கு ஒன்று சேர விருப்ப மில்லாமல் சண்டை சச்சரவுகள் செய்ய காரணமாகும். இருந்தாலும், யாவரு டைய க்ஷேமத்தையும் உலக சமாதானத்தையும் முன்னிட்டு அமெரிக்கா வுடன் சேர்ந்துகொள்வதில் எனக்கு இஷ்டம்தான். ஆனல் அரசியல் ஸ்தாபனங் களுக்குள் ஒரு ஒற்றுமையை ஏற்படுத்துவதைக்காட்டிலும் சம அந்தஸ்துடன் ஒத்துழைப்பது தான் மேலானது. அப்படி செய்வதால், பிரிடிஷ் சாம்ராஜ்யம், இடையிலிருந்து ஐரோப்பாவுக்கும், அமெரிக்காவுக்கும் அதிக நட்பை உண்டாக் கும். ஆசியாவுக்கும், அமெரிக்காவுக்கும் சிநேகிதத்தை உண்டாக்கும். வருங் காலத்தில் மனித வர்க்கத்தின் ஒற்றுமையையே ஸ்தாபிக்க முடியும்.

### நம்பிக்கையுடன் இருக்கவேண்டும்.

இவ்வித பெரும் லக்ஷியத்தை நாம் சாதிக்கவேண்டுமானால் நமக்குள் ஒரு நம்பிக்கை இருக்கவேண்டும். நமது கொள்கைகளிலும், முறைகளிலும் நம்பிக்கை வேண்டும். இப்பொழுதிருக்கிறவர்கள் இதற்கு முன்னிருந்த ரோட்ஸ் (Rhodes), சேம்பர்லின், கிப்லிங் போன்றவர்களின் ஏகாதிபத்தியத்தைப்பற்றி குறை கூறுவது சகஜம்தான். அவ்வித அரசாக்ஷிகள் குறுகிய மனோபாவத்துடனும், அகம் பாவத்துடனும் இருந்திருக்கலாம். இருந்தாலும் அவர்கள் தன் நம்பிக்கையை இழக்க வில்லை. அவ்வித கொள்கைகளின் தன்மையை லார்டு மில்னர் என்ற அரசியல் வாதி எடுத்துக் கூறினார். பின்னாடியும் சிலர் அவர் கொள்கைகளை பயின்றும் வந்தனர். இந்தக் கொடும் யுத்தம் வந்ததால் எல்லா விஷயத்திலும் நம்பிக்கை குறைந்துவிட்டது. அதற்காக வெறும் பேச்சுக்களைப் பேசாமல் தியாகம், முயற்சி முதலியவைகளைக் கையாளவேண்டும். கடந்த 50 வருஷ காலமாக உலகம் துரிதமாக மாறிக்கொண்டே வருகிறது. வருங்காலத்தில் இன்னும் வேகமாகவே போகும். வருங்காலத்தில் அமைக்கவேண்டிய பொறுப்பு உங்களுடையது. நம்பிக்கையினால் மலையையும் அசைக்கலாம் என்று சொல்லப் படுகிறது. அதை ஒட்டி பிரிடிஷ் சாம்ராஜ்யத்தையும், உலகத்தையும் உங் களுடைய நோக்கங்களும், புத்தியும் இடங்கொடுப்பதற்குத் தகுந்த விதமாக அமைத்துக்கொள்ளலாம்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### 27—6—42-லிருந்து 3—7—42-வரை.

**எகிப்து.**—27வ சனிக்கிழமை பிற்பகலில் எகிப்து சண்டை ஆரம்பமாகி விட்டது. மெர்ஸாமாட்ரூகிற்குத் தெற்கிலும், மேற்கிலும் இரண்டு பெரிய சண்டைகளும் நடந்தன. இவைகளை ஒரு தனிச் சண்டைகளென்று சொல்ல முடியாது. இருபடைகளும் மறுகிச் செல்லுவதிலேயே ஈடுபட்டிருந்தன. அன்றிரவு நிலா வெளிச்சத்தில் டாங்கிகளுக்கும், டாங்கிகளை எதிர்க்கும் பீரங்கி களுக்கும் விசித்திரமான சண்டை நடந்தது. டொப்ரூக்கில் பிளந்து சென்ற மாதிரி மெர்ஸாமாட்ரூக்கிலும் செய்யலாமென்று எதிரி நினைத்தான். ஆனால் ஒரு நாள் முன்னதாகவே அது காலி செய்யப்பட்டது. அதோடு அதை வசப் படுத்திக்கொள்ளவும் நினைக்கவில்லை. அங்கே ஏதோ சண்டை செய்து கைதி களைப் பிடித்ததாகச் சொல்லும் ஜெர்மன் கூற்று உண்மையல்ல. ஏனென்றால், அங்கே பிரிடிஷ் படையே கிடையாது. எகிப்து யுத்தத்தில் இதையே முதல் சண்டையெனக் கூறலாம்.

மெர்ஸாமாட்ரூக்கிற்குக் கிழக்கே கடற்கரைக்கும், குவாடர்ரா பள்ளத்தாக் குக்குமிடையில் இரண்டாவது சண்டை நடக்கிறது. இது ஒரு பெரிய சண்டை. இந்தப் பிரதேசம் 100 மைல் அகலத்தில் இருந்து குறுகி 40 மைலுக்கு வருகிறது. ரோமல் இந்தக் குறுகிய பாகத்தை நோக்கி முன்னேறுகிறான். நேசநாடுகள் இந்த அகண்ட பிரதேசத்திலேயே எதிர்த்து பல சண்டைகளைச் செய்ய நினைத் திருக்கின்றன. இவ்விதமாக எதிரியின் முன்னேற்றம் தடைபட்டிருக்கிறது.

பிரிடிஷ் 8-வது படைக்கு ஜெனரல் ஆசின்லக் தலைமை வகிக்கிறார். சமயம் மிகவும் நெருக்கடியானதுதான். நவம்பர் மாதத்தில் ரோமல் குறுக்கு எதிர்ப்பு களைச் செய்து, ஜெனரல் கன்னிங்ஹாமை முன்னேறவிடாமல் செய்தபோது ஆச்சின்லக்கு தலைமை வகித்தார். உடனே ஜடபாயாவை நோக்கி ரோமல் ஓடினான்.

அலெக்ஸாண்டிரியாவை நோக்கி ரோமல் போகிறான். எல்டாபாவிலிருந்து எல் அலமீன் வரை வந்திருக்கிறான். பிரதேசம் 30 மைல் அகலம்தான். இங்கே ஆச்சின்லக் சண்டை செய்வதெனத் தீர்மானித்திருக்கிறார். இந்த உத்தரவையும் போட்டிருக்கிறார்.

"ஒருமாத காலமாகத் தைரியமாகச் சண்டை செய்திருக்கிறீர்கள். வேறு எவராலும் இவ்விதம் சண்டை செய்திருக்கமுடியாது. இருந்தாலும், நினைத்த படி வெற்றி கிட்டவில்லை. அதற்குக் காரணம் எதிரி அதிகமான யந்திரப் படைகளை உபயோகித்ததுதான்.

"அப்படியிருந்தும் அவனுக்கும் ஏராள நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஸப்ளை களையும் அவன் எளிதில் பெறமுடியாது.

"நாம் யாவரும் அதிக முயற்சியுடன் சண்டை செய்யவேண்டும். இந்த எகிப்து சண்டையில் எதிரியை முறியடித்துவிடவேண்டும். உங்களால் முடிந்த வரை சண்டை செய்வீர்களென்று எனக்குத் தெரியும்.

"எதிரிக்கு நாம் ஓய்வு தரக்கூடாது. பார்த்த இடங்களிலெல்லாம் அவனைத் தாக்கவேண்டும். அவனை முறியடிக்கும் வரை நாம் சண்டை செய்யவேண்டும்".

எகிப்தின் பாதுகாப்புப் படையில் நியூஸிலாந்து படைகள் சேர்ந்துகொண்டி ருக்கின்றன. இந்தியப் படைகளும் கௌரவ ஸ்தானத்தை வகிக்கின்றன.

**ருஷ்யா.**—ஜெர்மானியர் ஸெபாஸ்டோபூலை நோக்கி ரிஸர்வ் படைகளை மீண்டும் அனுப்பிவருகின்றனர். வடகிழக்கு மார்க்கமாக ஒரு வழியையும் உண்டாக்கியிருக்கின்றனர். கைகலந்த சண்டைகள் நடந்துவருகிறது. நிலைமை மோசமாகத்தானிருக்கிறது.

குபயான்ஸ்க், கர்ஸ்க் இந்தப் பகுதிகளில் புதிய ஜெர்மன் தாக்குதல்கள் செய்யப்பட்டுள்ளன. இவைதான் ஒருக்கால் கோடைகாலத் தாக்குதல்களாக இருக்கலாம். முதலில் சொல்லிய இடத்தைப் பிடித்து, ரோஸ்டவைப் பிடித்து, காகஸஸைத் துண்டிக்க இருக்கலாம். இரண்டாவதான இடத்தைப் பிடித்து, மாஸ்கோவிலிருந்து டானெட்ஸைப் பிடிக்க ஏற்பாடாக இருக்கலாம். இந்த இரண்டு இடங்களிலும் ஜெர்மன் முன்னேற்றம் அதிகத் திருப்திகரமாக இல்லை. கார்கவ் பகுதியில் சண்டை அநேகமாக நின்றுவிட்டது.

அங்கர்ஸ்டிராய் (Angarstroi) என்ற ருஷ்யக் கப்பல் ஜப்பானியக் கடற் கரைக்கு 130 மைலுக்கு அப்பால் ஒரு ஜப்பானிய நீர்மூழ்கியால் அமுக்கப்பட்டி ருக்கிறது. அமெரிக்கர்களின் பேரில் ஜப்பான் இப்பழியைப் போடுகிறது.

**சைனு**—க்வேய்கியைப் பிடித்து லின்ச்வானை நோக்கியும், நான்சங்கை நோக்கியும் ஜப்பானியர் படைகளை அனுப்பிவருகின்றனர். பூகின் (Fukien) மாகாணத்தை நோக்கி முன்னேற இருக்கலாம். செகியாங்கில் செய்த மாதிரி இங்குள்ள விமானதளங்களை வசப்படுத்த இருக்கலாம். நான்செங்கின் எல்லைப்புறத்தில 87 மைல் தூரத்தில் சண்டை நடக்கிறது. லின்ச்வினுக்கு அருகிலுள்ள டாய்ஹாங் மலைகளைப் பிடிக்கவும் ஒரு சண்டை நடக்கிறது. சியாங்ஸி எல்லையில் யுகானை (Yukan) ஜப்பானியர் பிடித்துள்ளனர். துங்கி ஸ்தான் (Tungstan) தளங்களைப் பிடிக்கும் நோக்கம் இருக்கலாம்.

110 கிலோமீடர் இடைவெளியுள்ள இருப்புப் பாதையைப் பிடிக்கச் செய்த ஜப்பானியரின் முயற்சி பலிக்கவில்லை. ஏனென்றால், குவெய்தியை சீனர்கள் பிடித்து ஷாங்யாவோவில எதிர்ப்புச் சண்டைகளையும் செய்துவருகின்றனர். பிலிப்பைன்ஸிலுள்ள படைகளை ஜப்பானியர் மீண்டும் பயிற்சி கொடுக்க ஊருக்கு அனுப்பியிருக்கின்றனர். அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களும், விமானிகளும் சைனுவிற்கு வந்துவிட்டன.

ஆகவே மத்திய சைனுவிலும், வடகிழக்கு சைனுவிலும் சீனர்களே விமா னத்தாக்குதல் செய்யமுடிகிறது. யாங்ஸி நதி ஓரங்களில் ஜப்பானியச் சண்டைக் கப்பல்களை சீன பாம்பர்கள் தாக்கின.

**பர்மா**—இவ்வாரத்தில் மறுபடியும் அக்யாப் படையெடுக்கப்பட்டது. பர்மாவில் மிஞ்சியிருக்கும் சீனர்கள் கொரில்லாச் சண்டையைச் செய்கின்றனர். இவர்களுக்கு விமானமூலம் ஸப்ளைகள் அனுப்பப்படுகின்றன. பர்மாவிலுள்ள

சீனப்படைகளின் தலைவரான ஜெனரல் லோசோயிங் பர்மாவில் நேசதேசங்களின் குறுக்கு எதிர்ப்புகள் சீக்கிரத்தில் நேருமென்றும், அந்த எதிர்ப்பு ‘தரையில் மாத்திரமல்லாது எல்லாப் பகுதிகளிலும் நடக்குமென்றும்’ சொன்னார்.

**பஸிபிக்.**—ரபாலிலுள்ள டியாவரா (Diavera) என்ற விமான தளத்தை ஆஸ்திரேலிய விமானப்படை தாக்கி டில்லி (Dilli)யில் பெரும் தீக்களை மூட்டின. டுலகி பேரிலும் குண்டுகள் போடப்பட்டன. வேக் தீவை அமெரிக்க விமானங்கள் தாக்கின. ஸலாமூவாவில் செய்யப்பட்ட தாக்குதலில் 60 ஜப்பானியர்கள் கொல்லப்பட்டனர்.

சீனர்கள் செய்யும் கொரில்லாத் தாக்குதலுக்குப் பிரதியாக பிலிப்பைன்ஸிலுள்ள ஸெபு நகரத்தைப் பூராவாக ஜப்பானியர் அழித்தனர்.

**பஸிபிக் யுத்தக் கவுன்ஸில்.**—மறுபடி ஜூன் மீ 25உ கூடிற்று. அந்த சமயத்தில் ஜனாதிபதி ரூஸ்வெல்டும், சர்ச்சிலும் உலக நிலைமையைப் பரிசீலனம் செய்தனர். நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா, சைனா இவைகளின் ஒற்றுமை நிலைமையையும்பற்றி ஆலோசித்தனர். சீன அயல் நாட்டு மந்திரி மிஸ்ட்டர் ஸூங் என்பவரும் இதற்கு வந்திருந்தார். விமான உதவி வேண்டுமென்று அவர் வற்புறுத்தினார். இதை அச்சங்கம் அங்கீகரித்தது. டொப்ருக் விழுந்தாலும், எகிப்து சண்டையில் குறைவு இருக்காது என்று மிஸ்ட்டர் சர்ச்சில் வாக்குறுதி கொடுத்தார்.

மிஸ்ட்டர் சர்ச்சில் இங்கிலாந்திற்குத் திரும்பிவிட்டார். லிபியா சண்டையைப்பற்றி நடக்கப்போகும் காமன்ஸ் சபை சர்ச்சையில் கலந்துகொள்ளுவார்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **20—6—42.** (சனிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—**கப்பற்படை ஸ்தலம்**—எம்டன் (Emden). | | | |
| | **ராணுவ லக்ஷியங்கள்.**—வடமேற்கு ஜெர்மனி (Germany). | | | |
| | **விமான நிலயங்கள்.**—ஹாலந்து (Holland). | | | |
| | **விரோதிக் கப்பல்கள்.**—டச்சு (Dutch)க் கடற்கரைக்கருகாமையில். | ஒரு கப்பல் தாக்குண்டது. | 7 விமானங்கள். | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விமான எதிர்ப்புகள்.**—லிபியா(Libya)வின் முன்னணிப் பிரதேசங்களில். | | | |
| | **விரோதி ஸ்தானங்கள்.**—டொப்ருக் (Tobruk)குக் கருகாமையில். | | | |
| | **விமான நிலயம்.**—டிமிமி (Tmimi). | | | |
| | **துறைமுகம்.**—பெங்காஸி (Benghazi). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**20—6—42.** (சனிக்கிழமை)—தொடர்ச்சி.

**ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்).

**விமானச் சண்டைகள், விமான நிலயத்திலுள்ள விமானங்கள்.**—போரரங்கம் முழுவதிலும்.

**தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.)

**விமான நிலயத்திலுள்ள கட்டடங்கள், விமான நிலயம் தனிப்பட்ட விமானங்கள்.**—ஆக்கியாப் (Akyab).

**விமான நிலயம்,**—மாக்வி (Magwe).

**கட்டடங்கள்.**—ஹோமலின் (Homalin).

**அலூஷியன் தீவுகள் (Aleutians)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

**ஜப்பானியக் கப்பல்கள்.**—கிஸ்கா (Kiska) விலுள்ள துறைமுகத்தில். — ஒரு சஞ்சாரியும், சாமான் கப்பலும் மூழ்கடிக்கப்பட்டது.

**21—6—42.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்).

பகலில்.—**கப்பல்துறைகள்**—டங்கர்க் (Dunkirk).

இரவில்.—**சுரங்க வெடிகள்போடுவது** விரோதி சமுத்திரங்களில்.

**லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்).

**விரோதிக்குச் சொந்தமான போக்குவரத்து மோட்டார்கள்.**—ஸிடியாஸிஸில் (Sidiaziz) விமானமிறங்குமிடம்.

**விமானம் இறங்குமிடங்கள்**—கஸாலா (Gazala).

**மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(பிரிடிஷ் விமானங்களால்).

**விரோதி கப்பல் கூட்டம்.**—மத்தியதரைக் கடலில் (Mediterranean). — 2 பெரிய கப்பல்கள் தாக்குண்டன.

**ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்).

**விமானச் சண்டைகள்—விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்**—போர் முனை எங்கும்.

**தூரக்கிழக்கு (Far East)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்), தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை எதிர்ப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **22—6—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—வட பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium) கடற்கரை. | | | |
| | கப்பல் துறைகள்.—டங்கர்க் (Dunkirk). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான விமான நிலயம்.—வட பிரான்ஸ் (France). | | | |
| | இரவில்.—கப்பற்படை தளம்— எம்டன் (Emden). | | 6 விமானங்கள். | |
| | விமான தளங்கள்.–வட பிரான்ஸ் (France), ஹாலந்து, பெல்ஜியம் (Low countries). | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயங்கள், போக்குவரத்து.—லிபியா (Libya). | | | |
| | சைனியங்களுக்குப் பின்னுலுள்ள தளம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | விரோதி போக்குவரத்து.— டொப்ரூக் (Tobruk)-குக்கும், காபூஸோ (Capuzzo)வுக்கும் இடையேயுள்ள ரஸ்தாவில். | | | |
| | விமான நிலயம்.—பஹீரா (Baheira). | | 2 விமானங்கள். | |
| | கஸாலா (Gazala), டிமிமி (Tmimi). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு–பர்மா (Burma)**–(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—கப்பல் சரக்கு இறக்குமிடம்—ஆக்கியாப் (Akyab). | | | |
| | விமான நிலயம்.—மாக்வி (Magwe). | | | |
| **23—6—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—துறைமுக மேடைகள், கப்பல் துரையிலுள்ள கட்டடங்கள்.—டங்கர்க் (Dunkirk). | 1 கப்பல் தாக்கப்பட்டது. | 1 விமானம். | 2 விமானங்கள். |
| | இரவில்.—சுரங்க வேடிகள் போடுவது.—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | விரோதி விமான தளங்கள், ரயில்வே லக்ஷியங்கள்.–ஹாலந்து (Holland), வட பிரான்ஸ் (France). | | 2 விமானங்கள். | 2 விமானங்கள். |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—பின்னுலுள்ள பிரதேசங்களில். | | | |
| | போக்குவரத்து வண்டிகள், கவசம் பூண்ட வண்டிகள்.— டொப்ரூக் (Tobruk), பார்டியா (Bardia) ரஸ்தா முழுவதிலும். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **23—6—42.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்.—போர்முனை எங்கும். | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விமான நிலயம், கட்டடங்கள்.**—ஆக்கியாப் (Akyab). | | | |
| | **விமான நிலயம்.**—மாக்வி (Magwe). | | | |
| **24—6—42.** (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—நீர்மூழ்கி தளம்-ஸென்ட் நாஸேர் (St. Nazaire). | | நஷ்டமில்லை. | |
| | **விரோதி விமான ஸ்தலங்கள்.**—வட பிரான்ஸ் (France). | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான பெரிய மோட்டார் வண்டிகள் டாங்கிகள்.—ஷெவர்ஸன் (Sheferzen). | | | |
| | லக்ஷியங்கள்.—டெர்ணு (Derna), டிமிமி (Tmimi). | | | |
| | **கப்பல்.—துறைமுகம்**—பெங்காஸி (Benghazi). | | 4 விமானங்கள். | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | **விமானச் சண்டைகள்.**—போர் முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ பிரிடன்(New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விமான நிலயங்கள், மற்ற கட்டடங்கள்.**—(Rabaul). | | | |
| | **தூரக்கிழக்கு—டிமோர் (Timor)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | டில்லி (Dilli). | | | |
| **25—6—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—தொழிற்சாலைகள், ராணுவ லக்ஷியங்க்ள்-ப்ரெமன் (Bremen) (1,000 பிரிடிஷ் விமானங்களால்). | | 52 விமானங்கள். | 3 விமானங்கள். |
| | **விரோதி விமான ஸ்தலங்கள்.**—ஹாலந்து, பெல்ஜியம் (Low countries). | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | முன்னேறிச் செல்லும் விரோதித் துருப்புகள்.—மெர்ஸாமாட்ரூ (Mersa-Matruh). | | | |
| | துறைமுகம், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | இருப்புப்பாதை.—பெங்காஸி (Benghazi)க்குத் தெற்கே. | | | |
| | போக்குவரத்து.—காம்பூத் (Gambut) பிரதேசத்தில். | | | |
| | டோப்ருக் (Tobruk). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **25—6—42.** | (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்.—போர்முனை எங்கும். | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம், நகரம், கட்டடங்கள்.—ஆக்யாப் (Akyab). | | | |
| | **தூரக்கிழக்கு–நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | லே (Lae), ஸலாமுவா (Salamaua). | | | |
| **26—6—42.** | (வெள்ளிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—சுரங்க வேடிகள் போடுவது—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | விரோதி விமான தளங்கள், ரயில்வே லக்ஷியங்கள்—ஆக்கிரமித்த பிரதேசத்தில். | | | |
| | கப்பல்கள்—டச்சு (Dutch)க் கடற்கரைக் கருகாமையில். | | 1 விமானம். | |
| | பெரிய கப்பல் கூட்டம், ரயில்வே ஸ்டேஷனில் துருப்பு ஏற்றியிருக்கும் ரயில் வண்டிகள்—வடக்கு ஜெர்மன் பால்டிக் (Baltic) துறைமுகத்தில். | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான டாங்கிகள், போக்குவரத்து வண்டிகள்—ஸோலமி (Sollum)லிருந்து மெர்ஸாமாட்ருவுக்கு (Mersa Matruh). | | | |
| | துறைமுகம்—பெங்காஸி (Benghazi). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்—போரரங்கம் முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | அங்குமிங்குமுள்ள விரோதி மருந்து கிடங்குகள்—விமானஞ்சுடும் பீரங்கி ஸ்தானங்கள்–லே (Lae), ஸலாமுவா (Salamaua). | | | |
| | **தூரக்கிழக்கு–ஸாலமன் (Solomon) தீவுகள்**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | டுளகி (Tulagi). | | | |
| **27—6—42.** | (சனிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்—தொழிற்சாலைகள்–ப்ரெமன் (Bremen). | | | |
| | **விரோதி விமான தளங்கள்**—வட பிரான்ஸ் (France). | | | |
| | விரோதி கப்பல்கள்–பிரெஞ்சு (French)க் கடற்கரைக்கருகாமையில். | 1 கப்பல் தீ மூட்டப்பட்டது. | 11 விமானங்கள். | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **27—6—42.** (சனிக்கிழமை).—தொடர்ச்சி. | | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—வேவு பார்த்தல்—விரோதி தரைப்படைகள், விமான மிறங்குமிடங்கள். | | | |
| | போக்குவரத்து வண்டிகள்—ஸிடி பராணி (Sidibarrani) யிலிருந்து மெர்ஸாமாட்ரூவுக்கு(Mersa Matruh). | | | |
| | விமான நிலயம்—டெர்ணு (Derna). | | | 2 விமானங்கள். |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்—போர்முனை முழுவதிலும். | 384 விரோதி விமானங்கள் சுட்டு வீழ்த்தப் பட்டன. (20—27-வரை) | | |
| | தூரக்கிழக்கு–நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துருப்புகளின் ஸ்தானங்கள்—லே(Lae), ஸலாமுவா (Salamaua). | | | |
| | தூரக்கிழக்கு–ஸாலமன் (Solomon) தீவுகள்-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகப் பிரதேசம்—டுளகி (Tulagi) | | | |
| **28—6—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில் நீர்மூழ்கி தளம்.—ஸென்ட் நாஸேர் (St. Nazaire). | | | |
| | விரோதி விமான தளங்கள் ரயில்வே லக்ஷியங்கள்.—ஆக்கிரமித்த பிரான்ஸ் (France). | | | |
| | விரோதிக் கப்பல்கள்.-இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி மோட்டார் போக்குவரத்து டாங்கிகள்.—மெர்ஸாமாட்ரூ (Mersa Matruh) விலிருந்து ஸோலம் (Sollum) வரை. | பெருந் தீக்கள் கிளம்பின: பெரிய சேதம் விளைவிக்கப் பட்டது. | | |
| | வேவுபார்த்தல்.—முன்னணி பிரதேசங்களில். | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi), டொப்ரூக் (Tobruk). | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்யா விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போரரங்கம் முழுவதிலும். | | | |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | வேவுபார்த்தல்.—ஸலாமுவா (Salamaua). | | | |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **21—6—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—இங்கிலாந்தில் (England) ன் தென்மேற்குக் கடற்கரை. | | 1 விமானம். | |
| | இரவில்.—சமுத்திரக்கரையிலுள்ள ஒரு ஜில்லா.—தெற்கு இங்கிலாந்தில் (England). | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 4 விமானங்கள். | |
| | **லிபியா (Libya)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் ஸ்தானங்கள்.—ஸோலமு (Sollum) க்கருகில் | | | |
| **22—6—42.** (திங்கட்கிழமை.) | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **எகிப்து (Egypt)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | எகிப்து கடற்கரை.—ஸிடிபாரராணி (Sidibarrani) யிலிருந்து புகா (Fuka) வரையிலும். | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்) | | | |
| | மால்டா (Malta). | | 10 விமானங்கள்; இன்னும் அநேகம் சேதமாயின. | |
| **23—6—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—அங்குமிங்கும் சில இடங்கள். கிழக்கு ஆங்கிலியா (Anglia). | சேதமில்லை. ஒருவரும் காயப்படவில்லை. | 1 விமானம். | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 3 விமானங்கள். | |
| | **எகிப்து (Egypt)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் ஸ்தானங்கள்.—லிபியா—எகிப்து (Libya—Egyptian) எல்லைப்புறத்தில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டு போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **24—6—42.** (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ஒரு பட்டணம்—மேற்கு மிட்லாந்து தீவுகள் (Midlands), சில இடங்கள்—தென்மேற்கு இங்கிலாந்து (England). | | 5 விமானங்கள். | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்) | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **எகிப்து (Egypt)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் ஸ்தானங்கள்—எகிப்து (Egptian) எல்லைப்புறத்தில். | | | |
| **25—6—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 4 விமானங்கள். | |
| | **எகிப்து (Egypt)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | கடற்கரைப் பிரதேசங்கள்—மெர்ஸா மாட்ரூ (Mersa, Matruh)க்கருகாமையில். | | | |
| **26—6—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—கடற்கரையிலுள்ள ஒரு ஜில்லா–தெற்கு இங்கிலாந்து (England). | சொற்பச் சேதம் ஏற்பட்டது. | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 7 விமானங்கள். | |
| | **எகிப்து (Egypt)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மேர்ஸா மாட்ரூ (Mersa-Matruh). | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி துறைமுகம் (Moresby). | பலத்த சேதமில்லை. | 6 விமானங்கள். | |
| **27—6—42.** (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—நார்விச் (Norwich). | சிலர் கொல்லப்பட்டனர்; சொற்பச் சேதம். | 3 விமானங்கள். | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமர்னங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 7 விமானங்கள். | |
| | **எகிப்து (Egypt)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மேர்ஸாமாட்ரூ (Mersa Matruh). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **28—6—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ஒரு இடம்—தென்மேற்கு இங்கிலாந்து (England). | | 2 விமானங்கள். | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 3 விமானங்கள். | |
| | **எகிப்து (Egypt)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் ஸ்தானங்கள்—டாபா (Daba) பிர்எல்அராப் (Bir El Arab). | | | |
| **29—6—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | **பிரிடன் Britain**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—அநேக இடங்கள்—இங்கிலாந்தி (England)ன் மேற்கு, தெற்குக் கடற்கரைகளில். | சொற்பச் சேதம்; சிலர் கொல்லப் பட்டனர். | 2 விமானங்கள். | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **எகிப்து (Egypt)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் ஸ்தானங்கள்—மெர்ஸா மாட்ரு (Mersa Matruh)வைச்சுற்றிலும். | | | |

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**புதிய சந்தர்ப்பங்கள்.** யுத்த சேவை செய்கிறவனுக்கு பல புதிய வழிகளில் தொண்டு செய்யக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. எதிரிகளின் பொய் பிரசாரத்தைத் தடுக்கக் கூடியபடி உண்மை விவரங்களைப் பரவச்செய்வதோடு வேறு காரியங்களும் இருக்கின்றன. ஜனங்களின் முன்னேற்றத்தையும் சௌகரியத்தையும் செய்யக் கூடிய துறைகளிலும் ஈடுபடலாம். இவ்வித வேலை யுத்த சேவை செய்கிற வனுக்கு அவனை அறியாமலேயே சுவாதீனமாகும்.

வி வி வி வி வி வி வி

**உணவுப் பண்டங்களை அதிகம் உற்பத்தி செய்யவும்.** சில தினங்களில் தனது அழகிய தோட்டத்தில் தானே காய்கறிகளைப் பயிரிட்டு மேன்மை தங்கிய வைஸிராய் ஒரு திருஷ்டாந்தமாக விளங்குவார். அதைப்போல் இந்தியா முழுவதும் செய்யப்படும். தென் இந்தியாவில், சில பெரிய நகரங்களைத் தவிர, ஒவ்வொரு வீட்டிலும் தனியான இடம் இருக்கிறது. இங்கே காய்கறிகளைப் பயிரிடுவது சகஜம். இவ்வழக்கம் மீண்டும் செய்யப்படவேண்டும். வயது கடந்தவர்கள் தோட்ட வேலையைச் செய்வதும், சிறியவர்கள் தண்ணீர் பாய்ச்சுவதும் செய்யலாம். இவ்விஷயத்தில்

பொழுது போக்குக்காக மட்டில் ஈடுபடாமல் யுத்தத்தை முன்னிட்டே ஈடுபட வேண்டும். ஒரு எதிரி பர்மிய எல்லையில் இருக்கிறான். மற்றொருவன் மத்தியக் கிழக்கில் புகுறப் பார்க்கிறான், தனது மக்களுக்கும், சைனியங்களுக்கும், மத்தியக்கிழக்கிலுள்ளோருக்கும், சைனாவிற்கும் உணவை இந்தியா தயாரிக்க வேண்டும். கிழக்குச் சீமைகளை ஜப்பானியர் ஆக்கிரமித்துக்கொண்டதால் இனி அங்கிருந்து ஒன்றும் வந்துசேராது. ஸிலோனுக்கும் உணவை அனுப்பவேண்டும். விலைவாசிகள் உயர்ந்ததாலும், சில சாமான்கள் கிடைக்காததாலும் நமக்கு சில அசௌகரியங்கள் ஏற்பட்டுவருகின்றன. அவைகளை ஈடுசெய்யவேண்டும்.

வி வி வி வி வி வி வி

**வீணுக்காதே.** இது மிக முக்கியமானது. முன்னைக் காட்டிலும் அதிகமாக உற்பத்தி செய்து குறைவாகச் செலவழிப்போம். ஞாயிற்றுக்கிழமை லண்டனிலிருந்து எண்ணெய் இலாகா மந்திரியான குவிலிம் லாயிட் ஜார்ஜ் ஒலிபரப்பும்போது, கரி, காஸ் (gas) மின்சாரம், எண்ணெய் முதலியவைகளைக் குறைவாகச் செலவழிக்க வேண்டுமென்றும், கடைகளின் ஜன்னல்களில் விளக்கு களேற்றுவது முதலியவை குற்றமாகுமென்றும் அறிவித்தார். அதிலிருந்து நாமும் சிலவற்றைத் தெரிந்துகொள்ளலாம். குளிர்தேசங்களில் உபயோகிப்பது போல் நாம் எண்ணெய் முதலியவைகளை அதிகம் செலவழிக்காத போனாலும், வேறுவழிகளில் குறைவாக உபயோகிக்கலாம். மோட்டார் முதலியவைகளுக்கு பெட்ரோல் கிலக்கரி முதலியவைகளைக் குறைவாகவே உபயோகிக்கவேண்டும். பர்மா எதிரி வசமானதிலிருந்து கிழக்கிந்திய எண்ணெய் வராமல் நின்றுவிட்டது. ஒரு கரி மூட்டையை குறைவாக உபயோகித்தாலும், ஒரு எலெக்டிரிக் விளக்கை தினம் ஏற்றாமல் இருந்தாலும் இதைக்கொண்டு பரம்பரையாக யுத்த சாமான்களை உற்பத்தி செய்வதற்குச் சாதகமாகும். ரயில் வண்டிகளில் பிரயாணிகள் எவ்வளவுக்கெவ்வளவு குறைவாகப் பிரயாணம் செய்கின்றனரோ அவ்வளவுக் கவ்வளவு சிப்பாய்களை அதிகம் ஏற்றி போர்முனைகளுக்கு அனுப்பமுடியும். அல்லது இரவும் பகலுமாக காவல்புரியும் சிப்பாய்களுக்கு ஸப்ளைகளை அனுப்ப இடவசதி ஏற்படும். ஒரு அவுன்ஸ் எண்ணெய் கிடைத்தாலும் விமானம் முதலிய வைகளை உபயோகிக்கமுடியும். சிக்கனத்தின் உண்மையைத் தெரிந்துகொண்டு நடந்துகொண்டால் சரியானபடி யுத்த சேவை செய்வதாகும். ஒரு கை அரிசியை மிச்சம் பிடித்தாலும் புதிதாக உற்பத்தி செய்யவேண்டிய அவசியம் ஏற்படாது. தினம் வீடுகளில் அஜாக்ரதையாக நடப்பதால் வீணாகும் பண்டங்களைக்கொண்டு ஒரு சைனியத்திற்கு உணவைச்கொடுக்கலாம். அதைப் போல் மீதப்பணத்தை யுத்தக் கடன் பத்திரங்களை வாங்க உபயோகித்தால் யுத்த சாமான்களைச் செய்ய சாதகமாகும். அதேவிதமாக சிப்பாய்களாகவோ தொழிற்சாலை ஆட்களாகவோ சேர ஜனங்கள் முன்வந்தால் வெற்றி சீக்கிரத்தில் கிடைக்க ஹேதுவாகும். எதிரியின் பொய் பிரசாரத்தை அடக்கி, ஸ்திரீ புருஷர் களின் தைரியத்தை நிலை நாட்டினாலும் வெற்றியடையலாம்.

முன் சொன்னபடியெல்லாம் ஒத்துழைக்க அரசாங்கத்தார் முன் வந்து கொண்டிருக்கும்போது ஜனநாயகக் கொள்கைகளை அனுபவத்தில் பயன்படுத்திக் கொண்டு பொதுஜனங்களே முன் வருகின்றனர். இங்கிலாந்தில் ஜனங்கள் தனிக் கூட்டங்களாக அமைந்துகொண்டு, கொஞ்சம் கொஞ்சமாக தங்களுடைய லக்ஷியங்களை அடைந்துவருகின்றனர். தாங்களாகவே சில திட்டங்களைப் போட்டுக்கொண்டு அதன்படி தீவிரமாக நடந்துவருகின்றனர். இங்கிலாந்தில் சில பிரதேசங்கள் தாக்குகளாகப் பிரிக்கப்பட்டு உற்பத்தி மந்திரிகளின மேல் பார்வையில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. ஸர் ஜார்ஜ் ஸ்டாபிளீடனின் திட்டப் படி பொதுப்பண்ணை திட்டமும், பாற்சாலைகளும் நன்றாக நடந்துவருகின்றன. உருளைக்கிழங்கு, பச்சை காய்கரி, முதலியன அதிகமாகப் பயிரிடப்படுகின்றன. வியவசாயிகளின் கூலி இரட்டிப்பு மடங்கு ஆகிவிட்டது. இவ்விதமாக இங்கிலாந்து மிஸ்ட்டர் வின்ஸ்டன் கூறியபடி (காரியாம்சையில் ஈடுபட்ட ஜனநாயகம் ஆக மாறி), நேசதேசங்களின் வெற்றியை ஊர்ஜிதப்படுத்தி, பிற்காலத்தில் சமாதானத்தை

நிலைநாட்டக் காரணமாக இருக்கிறது. சமாதான காலத்தில் வீடுகளை அதிகம் கட்டுவதும், உணவுப் பண்டங்களை அதிகம் உற்பத்தி செய்து பொதுமக்களின் க்ஷேமத்தைக் கோருவதும் தான் முக்கிய வேலையாக இருக்கும்.

வி வி வி வி வி வி வி

**அமெரிக்காவில் சர்ச்சில்-ரூஸ்வெல்டு சந்திப்பு.** இந்த இருவர்களும் தற்சமயம் மூன்றும் தடவையாகச் சந்தித்தனர். முதலாவது, சந்திப்பு அட்லாண்டிக்கின் மத்தியில் பல சண்டைக் கப்பல்களுக்கு நடுவில் ஏற்பட்டது. இரண்டாவது வாஷிங்டனில் கிறிஸ்துமஸ் மத்தியில் நடந்தது. இபபோது நடந்ததும் வாஷிங்டனில் தான். இவை யாவும் ஒரு வருஷத்திற்குள் ஏற்பட்டன. ஒவ்வொரு சந்திப்பும் முக்கிய மானவை. முதலாவதான சந்திப்பில் அட்லாண்டிக் சாஸனம் பிறந்தது. இரண்டாவது சந்திப்பில் பிரிடிஷரும் அமெரிக்கர்களும் ஒன்று சேர்ந்து சண்டை செய்வதெனத் தீர்மானித்து அதன் பயனாக நடந்த பவளக்கடல் சணடையிலும், மிட்வே தீவு சண்டையிலும் வெற்றி கிடைத்தது. இந்தியாவிற்கு ஏராள் அமெரிக்க விமானங்களும், சைனியங்களும் வந்து சேர்ந்தன. வடக்கு அயர் லாந்திலுள்ள பிரிடிஷ் படைகளை அழைத்துக்கொள்ளவும் முடிந்தது. இந்த மூன்றுவது சந்திப்பும் விசேஷமானது தான். மாலடோவின் விஜயத்தின் பயனாக ஆங்கிலேய-ருஷ்ய ஒப்பந்தமும், அமெரிக்க-ருஷ்ய ஒப்பந்தமும் ஏற்பட்டு கப்பல்கள், ஸப்ளைகள், பொதுவான தந்திரம், இரண்டாம் போர்முனை முதலிய பிரச்னைகள் நன்றாக நிர்த்தாரணம் செய்யப்பட்டன. இதுவரை இருந்த அமெரிக்க—ஆங்கிலேய ஒப்பந்தம், ஆங்கிலேய-அமெரிக்க-ருஷ்ய ஒப்பந்தமாக மாறிவிட்டது.

வி வி வி வி வி வி வி

**உற்பத்தியும், போக்குவரவும்.** தற்சமயம் கவனிக்கப்பட வேண்டிய விஷயங் கள்தான் முதலாவதான அம்சத்தைப் பற்றி ஜூன் 26வ ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சொல்லும்போது மாதம் 4,000 விமானங்களும், 1,500 டாங்கிகளும், 1,00,000 விமானங்களும் கட்டப்படுவ தாகச் சொன்னார். அதே தினத்தில் அமெரிக்க அரசாங்கத்தார் அறிவிக்கும் போது உலகம் பூரா ராணுவ விமான மார்க்கம் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டது.

வி வி வி வி வி வி வி

**பிரிடிஷாரின் உறுதிமொழிகள்.** பிரிடிஷாரும் ருஷ்யாவிற்கு ராணுவ ஸப்ளைகளை அனுப்புவதாக ஒப்புக்கொண்டனர் பிரிடனிலும், குடியேற்ற நாடுகளிலும் செய்யப்படும் யுத்த தளவாடங்களை விலை வாங்காமலேயே கொடுக்கப்படும். ஏற்கனவே ருஷ்யாவிற்குக் கொடுத்த ஒரு கோடி பவுனேடு மீண்டும் 2 கோடி பவுன் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**பண ஆசையில்லை.** அமெரிக்கா பணத்தின்மேல் நடத்திவந்த திட் டங்களையும், தனிப்பட்ட கக்ஷியின் நோக் கங்களையும் மறந்து விட்டது. அமெரிக்க சபை முன் ஐந்தாவது ரிபோர்ட்டை சமர்ப்பிக்கும் போது ஜனாதிபதி ரூஸ்வெல்ட் யுத்தத்தின் முடிவில் வரவு செலவு விஷயங்கள் அதிகம் கவனிக்கப்படமாட்டா என்றார். 'குத்தகைக்கடன் மசோதாவிற்குப் பதிலாக அந்தந்த நாடுகள் ஜெர்மனியையும் ஜப்பானையும் எதிர்த்துப்போராடினல் போதுமானது.' இவ்விஷயம் சபையில் அங்கீகாரம் பெற்றால் அதன்படி நடந்து கொள்ளப்படும்.

இதைப்பற்றி ஜூன் 18வ வால்டர் லிப்மான் பின்கண்ட அபிப்பிராயத்தைக் கூறினர்

"முதலாவதான திட்டத்தின்படி நேசநாடுகளுக்கு அனுப்பப்படும் யுத்த தளவாடங்களின் கணக்கைக்கொண்டு பிறகு கணக்கு தீர்க்கும் வியவகாரம்

கிடையாது. எதிரியுடன் சண்டை செய்யும் நோக்கத்துடன் ஒரு தேசம் தன்னால் கொடுக்க முடிந்த அளவு பணத்தைக் கொடுத்தால் போதுமானது. அதற்கும் யுத்த சாமான்கள் அனுப்பப்படும்.

"ஆகவே உயிரைக் கொடுத்து மன்றுடிக்கொண்டிருக்கும் நாடுகளுடன் லேவாதேவி வியவகாரம் பேசுவது கொடிய அபிப்பிராயமாகும். சீனர்கள், ருஷ்யர்கள், பிரிடிஷார் போலந்துக்காரர்கள், செக்கர்கள், நார்வேக்காரர்கள், டச்சுக்காரர்கள் யாவருக்கும் பாடான், காரிஜிடார், ஜாவா, பவளக்கடல், மிட்வே, அலூஷியன், மத்தியதரைக்கடல் முதலியவைகளில் நாம் செய்த போர்களைப் போல் சமமான கஷ்ட நிலைகளை அனுபவித்துத்தானிருக்கின்றனர்.

"ஒவ்வொருவரும் செய்த உதவியை சுலபமாகக் கணக்கிட முடியாது. தங்களால் முடிந்ததை யெல்லாம் கொடுக்கும்போது அவைகளுக்கு எவ்வாறு விலை மதிக்க முடியும். பிரிடன் மேல் நடந்த விமானப்போர், மாஸ்கோ தற்காப்பு மால்டா, செக்கோஸ்லாவாகியா இங்கே நடைபெற்ற சண்டைகளை எவ்வாறு ஒருவன் மதிப்பிடமுடியும். இம்மாதிரி கொடிய கணக்கை எங்கும் செய்யமுடியாது.

வி வி வி வி வி வி வி

**எகிப்து எல்லை.** இங்கிருந்தும், சமீபத்தில் கிடைத்த செய்தி அவ்வளவு திருப்திகரமாக இல்லை. நேச நாடுகளின் எட்டாவது சைனியம் இன்னும் கலையாமல் மெர்ஸாமாட்ருவிற்கு கிழக்கே நின்று சண்டை செய்கிறது. அங்கிருக்கும் நிலையில் நமக்கு சந்தோஷத்தை அளிக்கக்கூடியவை ஆச்சின்லக் தலைமை வகிப்பதும், சர்ச்சிலின் தைரியமும், 'பிரமாதமாக சிரமம் ஏற்பட்டாலொழிய பிரகிருதமிருக்கும் ராணுவ நிலை திருப்திகரமாக இருக்கிறதென்று' நஹஸ் பாஷாவின் அறிவிப்பும்தான். கெய்ரோவிலிருக்கும் 'இந்திய சைனிய விமர்சகர்' ஒருவர் பிரிடிஷ் சைனியங்கள் பின் வாங்கியதை ஒரு ராணுவ தந்திரம் என்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார். 'எகிப்து சண்டையில் எட்டாவது படை தந்திர நிலைகளை தினம் சுவாதீனப்படுத்திக்கொண்டு வருகிறதாகவும், சொன்னார். மேலும் அவர் சொல்லுவதாவது, 'மெர்ஸாவை ஒரு விசேஷயுத்த அரங்கமாகக் கருதுவதே பிசகு. எதிரியைக் களைக்கச்செய்து குறுக்கு எதிர்ப்பு செய்யும் காரியத்தில் அது ஒரு சம்பவம்தான்.

"எதிரியின் திட்டம் தாமதப்படும் விஷயம் வியக்தமானது. நமது நிலைகளுக்குத் தடையேற்படவில்லை. நமது படைகள் எதிரியை இருபிளவாகப் போகும்படி செய்யப் பார்க்கின்றன. இதுவே அவனது பயம்!

இந்த அபிப்பிராயம் சரியாகவோ அதிக ஆசையுள்ளதாகவோ எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். நமது படைகள் வெகுதூரம் சென்று உயிரைக் கொடுத்து சண்டை செய்யும் விஷயத்தைப்பற்றி குறைகூறுவது தவறாகும்."

மிஸ்ட்டர் சர்ச்சிலுக்கு பார்லிமெண்டு அனுபவம் அதிகமிருப்பதால் நம்பிக்கையில்லாத தீர்மானத்திற்கு பதில் கூறும் வழி அவருக்கு நன்றாகத்தெரியும். பார்லிமெண்டும் அவர் சார்பாக வோட்செய்யும். இதற்குள் ஏதாவது ரகசியங்களைச் சொல்லிவிட்டால் எதிரிக்குத்தான் சாதகமாகும். எதிரியோ அமெரிக்க விமானங்களுக்கு சக்தி அதிகம் இல்லையென்றும், டிகால் சைனியம் கூலிக்குப் பிடிக்கப்பட்டதென்றும் சொல்லி வருகிறான். ஜெனரல் ஸ்மட்ஸ் சாம்ராஜ்யத்தின் உண்மை புதல்வரில் ஒருவர். ஜூன் 28வ சைனியத்திற்கு ஆட்களைச் சேகரிக்கும்போது அவர் சொன்னதாவது:—

'டொப்ருக் எதிரிவசமானதால் ஏற்பட்ட மனித நஷ்டத்தை ஈடுசெய்ய வேண்டும். போர்முனையிலுள்ளோருக்குத் தகுந்தபடி நாம் நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் செய்த சண்டையை நாமும் மீண்டும் நடத்த வேண்டும்.

'அவ்விதம் நாம் செய்யப்போகிறோமா, அல்லது சும்மா இருக்கப் போகிறோமா" டொப்ருக்கைப்பற்றி குறைகூறுவோர் அங்கு இறந்த பிரிடிஷ், இந்தியர், தென் ஆபிரிக்கர் இவர்கள்பேரில் ஒன்றும் சொல்லமுடியாது, பிழை எங்கேயே இருக்கிறது!

**துணைக்கப்பல் சம்பவங்கள்.** மால்டா, டொப்ருக்கிற்குச் சென்ற பிரிடிஷ் துணைக்கப்பல்களைப்பற்றி பிரமாத நஷ்டமடைந்துவிட்டதாக அச்சு நாடுகள் சொல்லுகின்றன. ஜூன் 17வ பெர்லின் சொல்லும்போது பிரிடிஷார் 4 க்ரூயிஸர்களையும், 2 நாசகாரிகளையும் இழந்ததாகச் சொல்லிற்று, ஜூன் 19வ ஜப்பான் சொல்லும்போது பிரிடிஷ் நஷ்டம், ஒரு சண்டைக்கப்பல், 2 விமானமேற்றும் கப்பல், 6 க்ரூயிஸர், 5 நாசகாரிகள், 2 காவல் கப்பல்களென்று சொல்லிறறு. வகையே இல்லாத 'ஜிப்ரால்டர் வகை போன்றதென்றும் பொய்யாகச் சொல்லப்பட்டது. இந்த சந்தர்பத்தில் காமன்ஸ் சபையில் அட்லி கொடுத்த விவரஙகளைப் பார்ப்போம்.

| பிரிடிஷ் | | எதிரி |
|---|---|---|
| 1 சிறிய க்ரூயிஸர் | (16 அங்குல பீரங்கிகள்) | 1 பெரிய க்ரூயிஸர். 8 (அங்குல பீரங்கிகள்). |
| 4 நாசகாரிகள் | | 2 நாசகாரிகள். |
| 2 துணைக்கப்பல்கள் | | 1 யூ படகு. |
| 30 விமானங்கள் | | 65 விமானங்கள். |

நஷ்டமான கப்பல்களின் டன் கணக்கு சமமானதே.

வி வி வி வி வி வி வீ

**ஜெனரல் எலியாஸ்.** முன்பு செக்கோஸ்லாவியாவின் பிரதம மந்திரியாக இருந்தவர். ஹிட்ரீச் கொலைசெய்யப்பட்டதில் இவர் சம்பந்தப்பட்டவர் என்ற காரணத்தினல் ஜூன்மீ 16வ கொலை செய்யப்பட்டார். ஆனல் ஹீட்ரிச் கொலையில் இவர் எவ்விதம் சம்பந்தப்பட்டார் என்று இன்னும் தெரியவில்லை. சுமார் ஒரு வருஷத்திற்கு முன்னே ஜெர்மன் அரசாங்கத்திற்கு விரோதமாக திட்டஙகளைப் போட்டதாகவும், பிரஸிடெண்டு பென்ஸுடன் சம்பந்தம் வைத்துக்கொண்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டார். நாஸிகள் அதிகாரத்தின்கீழ் சுமார் 10 மாதகாலம் கைதிக்கூடத்திலேயே இருந்து வந்தார். உண்மைக் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டார்கள் என்றும், அதில் எலியாஸ் சேர்ந்தவரில்லை என்றும், பகிரங்கமாக ஜெர்மானியர்கள் வெளியிட்டும் இருக்கின்றனர். அப்படியிருந்தும் இப்பொழுது ஹிட்ரீச் கொலைக்குற்றத்தில் எலியாஸும் சம்பந்தப்பட்டவர் என்ற காரணததை முன்னிட்டு அவரைச் சிறைச் சாலையிலிருந்து நாஸிகள் பிடித்திழுத்து வந்து கொலை செய்ததாக வந்த செய்தி ஆச்சரியமாக இருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**கூட்டமாகக் கொள்ளையடிப்பதும், கொலைசெய்வதும்.** ஹீட்ரிச்சைக் கொலைசெய்ததற்காக ஏராளமான பேர்களைக் கொலை செய்வதென நாஸிகள் நினைத்திருக்கின்றனர். ஜூன் 22வ வரை 72 ஸ்திரீகள் உள்பட 520 பேர் கொல்லப்பட்டுள்ளனர். லாடிஸி, லெஸக்யாப், பிரேக்கிற்கு 60 மைல் தூரத்திலுள்ள மற்றொரு கிராமம் இவைகள் அழிக்கப்பட்டன. குடை விமானக்காரர்களை மறைத்து வைத்திருப்பதாகக் குற்றம் சாட்டி 100 பேர்கள் கொல்லப்பட்டனர்.

வி வி வி வி வி வி வி

**லாடிஸி** கிராமத்தை அழித்ததைப்பற்றி செக்கர் ஒருவர் ஜூன் 12வ பி. பி. ஸியில் பேசியுள்ளார்:—பிரேக்கிலிருந்து மோட்டார் வண்டிகள் செல்லும் முக்கிய ரஸ்தாக்களுக்குப் பக்கத்தில் லாடிஸி என்னும் ஒரு குக்கிராமம் இருக்கிறது. அதை எனக்கு நன்ருகத் தெரியும். அக்கிராம வாசிகளில் சுமார் 500 பேர்கள் கிளாட்னே—நிலக்கரி சுரங்கத்தில் வேலை பார்க்கிறவர்கள். அவர்களில் சிலர் சிறு குடியானவர்களாகவும் இருந்தார்கள். அவர்களுக்கு அநேகமாக ஹோராக் அல்லது ஸ்டைபல் என்ற பெயர்கள்தான் இடப்பட்டிருக்கும். இந்தக் கிராமத்தில் நடந்த கொடுஞ்செயலைப்போல் இதுவரை தேச சரித்திரத்திலேயே வேறு எந்த

இடத்திலும் நடந்ததாக எழுதப்படவில்லை. போலந்து, ருஷ்யா, நார்வே முதலிய இடங்களில ஏராளமாக ஜனங்கள் கொலை செய்யப்பட்டார்கள். ஆனல் குழந்தைகள்மட்டில் கொலை செய்யப்படாமல் சும்மா விடப்பட்டன. அவர்கள் தாய்மார்களிடமிருந்து அவர்கள் பிரிக்கப்படவில்லை. ஆனல் லாடிஸி என்ற கிராமத்தில் மட்டும் நடந்த சம்பவம் வேறு புருஷர்கள் யாவரும் கொலை செய்யப்பட்டவுடன் அவர்களுடைய மனைவிமார்களிடமிருந்து குழந்தைகள் யாவும் பிரிக்கப்பட்டன். சமீபத்தில் பிறந்த இளங் குழந்தைகளும் பிரிக்கப் பட்டன. இப்பொழுது ஆடுமாடுகள் ஏற்றியனுப்பப்படும் வண்டிகளில் இக் குழந்தைகளையும் ஏற்றி ஜெர்மனிக்குக் கொண்டுபோகப்படுகின்றன. என்ன கொடுமை. எனக்கு Mrs. ஹோராகோவாவைத் தெரியும், அவளுக்கு அப் பொழுது வயது 45. மேலும் அவளுக்கு 4 குழந்தைகள் உண்டு. அவளுடைய புருஷனும், மூத்த பையனும் அவளுக்கு முன்னாலயே நிறுத்திவைக்கப்பட்டு சுடப்பட்டார்கள். அவளுடைய 17 வயதுள்ள மூத்த மகள, மற்ற 6 வயது, 4 வயதுள்ள சிறு பையன்களுடன் ஏற்றியனுப்பப்பட்டாள. இவர்களின பிரிவுக்குப் பிறகு அவள் ஒன்றும் புரியாமல் கவலையுடன் வெட்டவெளியில் உற்று நோக்கிய வண்ணம் இருந்தாள். இவளைப்போல் குழந்தைகளைப் பறிகொடுத்து துக்கத்தில் ஆழ்ந்த மற்ற தாய்மார்களுடன் ஒரு சிறு தொட்டியில் உட்கார்ந் திருந்தாள். அவர்களுக்கு, எல்லோருக்குமே ஒரே ஒரு நம்பிக்கைதான ஏற்பட் டிருந்தது. அதுதான் இவர்களுடைய சைனியம். அது மிக்க பலமும், சக்தியும் வாய்ந்தது. ஈவிரக்கமில்லாதது. அது வெற்றிகரமாக என் தேசத்து ஜனங் களின் துயரத்தை அடியோடு நீக்கிவிடும். இதேமாதிரி கதிதான் ஐரோப்பிய ஜாதியார்களுக்கும் கிடைக்கும். ஜெர்மனியிலிருக்கும் பிரதேசங்களில எங்கு முள்ள கைதிக்கூடங்களைத் திறந்துவைத்துவிடும். ஆனல் பண்டை காலத்தில் செழுமையாயிருந்த அந்த கிராமத்தில் இபபொழுது எரிந்து, க்ஷீணித்துப் போன குவியல்கள் ஏராளமாகக் கிடக்கின்றன. இவவிதம் நடைபெற்ற ஜெர்மன் அட்டூழியங்களைப்பற்றி எழுதப்பட்டு வருங்காலத்தில் அங்கு ஒரு ஞாபகச் சின்னம் தோன்றுகிறது.

கிரேட் பிரிடனிலிருக்கும் ஸெக்கோஸ்லாவியா விமானப்படையைச் சேர்ந்த 2 விமானிகள் இந்த கிராமத்திலிருந்து வந்தவர்கள். இன்று அவர்கள் ஒருவருக்கு ஒருவர் சபதம் செய்துகொண்டு நாஸிகளை ஒழிக்க நினைத்திருக்கிறார்கள்.

வி வி வி வி வி வி வி

**பாங்காக் சூழ்ச்சிகள்.** இந்தியாவைப்பற்றிய பிரசாரத்தை நடத்த ஜப்பானியர் பாங்காக் ரேடியோவையும் உபயோகித்துக் கொள்ளுகின்றனர். இதற்காக சில இந்தியர்களை வசப்படுத்தியும் இருக்கின்றனர். இவர்களை ஹிட்லர், '(கிழக்கிந்திய உபந்யாசகர்கள் என்று கேலி செய்கிறுன்.) பொலிவியாவிலிருந்து, கலகம் செய்த குற்றத்திற்காக விரட்டப் பட்ட எர்னஸ்டு லென்டலர் என்ற ஜெர்மானியர் தாய்லாந்தில் பிரதி நிதியாக நியமிக்கப்பட்டுள்ளான். அவன் வசத்தில்தான் தாய்லாந்து ரேடியோ இருக் கிறது. இந்திய ஸ்வதந்திரத்தை வெகு ஆடம்பரத்துடன் கொண்டாடினுன். கிழக்கு நாட்டிலுள்ள 20 லக்ஷம் இந்தியர்களின் 100 பிரதி நிதிகள் வந்திருந் தனராம். ஜூன் 17உ இதைப்பற்றி ஜப்பானிய ரேடியோ அதிகம் எச்சரிக்கை செய்தது. 'இந்தியாவிலிருந்து கிடைத்த செய்தி திருப்திகரமாக இல்லாததால் இக்கூட்டம் சீக்கிரத்தில் ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்று' சொல்லிற்று.

இவை யாவும் வீண் ஆடம்பரம் என்பதைப்பற்றி நாம் அதிகம் சொல்ல வேண்டியது இல்லை. வியாபாரத்தில் ஈடுபட்ட சில இந்தியர்கள் ஸயாமில் இருக் கிறார்கள். இவர்களின் ஜீவனம் ஜப்பானியரின் கையில் இருக்கிறது. ஒரு கூட் டத்திற்குப் போ என்றால் இவர்கள் போகத்தான்வேண்டும். ஒரு விஷயத் தைப்பற்றிச் சொல் என்றால் பேசத்தான்வேண்டும். அவ்வளவு நிர்பந்தமும் இருக்கிறது.

**ஸாங்கிராம் கழுதை.** ஸயாமும் ஜப்பானின் ஆசைக்கு ஒரு தளமாக இருக்கிறது. ஜப்பானில் ஒரு திட்டத்தில் பின்வருமாறு சொல்லப்பட்டது :-தாய்லாந்து நமது வசமாக இருந்தால் பர்மாவைப் பிடிக்கலாம். பர்மாவைப் பிடித்தால் இந்தியாவையும் பிடிக்கலாம். ஸயாம் ஒரு தனிப்பட்ட ஸாங்கிராம் என்பவனின் கொடுங்கோல் ஆட்சிக்கு உட்படுத்தப் பட்டது. தாய்லாந்தின் படைகள் ஷான் ஸமஸ்தானத்திலும் அனுப்பப்பட்டன. ரெங்கூன் ஸயாம் சட்டதிட்டப்படி அரசாக்ஷி செய்யப்படுமென்று ஸாங்கிராமிற்கு எடுத்துச் சொல்லப்பட்டது.

உடனே கர்வமடைந்து ஜூன் 15ல் ஒலிபரப்பிவிட்டான். 'இந்தியாவின் பயிற்சியைத் தாய்லாந்து நிலைநாட்டும். இந்தியாவை விடுவிக்க தாய்நாட்டார் பாடுபடுவார்கள். இவர்கள் யாவரும் தாய்லாந்துத் தலைவன் சொற்படி நடக்க வேண்டும்,

முஸோலினியின் உருவப்படத்தை ஸாங்கிராம் பெற்றிருக்கிறான். தன்னை முஸோலினியைப் போல் நினைத்துக்கொண்டும் இருக்கிறான்.

இவனும் கழுதையாக மாறிவிட்டான்.

---

# பிரதம மந்திரி, மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் வாஷிங்டனிலிருந்து லண்டனுக்குத் திரும்பி வந்தவுடன் அவர் ஒரு அறிக்கை வெளியிட்டார்.

---

## அதன் விவரம் பின்வருமாறு :—

"யுனைடெட் ஸ்டேட்ஸ் ஜனாதிபதியும், பிரிடிஷ் பிரதம மந்திரியும் நேச நாடுகள் ஒவ்வொரு கண்டத்திலும், ஒவ்வொரு கடலிலும் நடத்திவரும் யுத்தத்தைப் பற்றிய முக்கிய பிரச்னைகள் அனைத்தையும்பற்றி ஒரு வாரம்வரை ஆலோசித்தனர்.

"நமக்குள்ள அனுகூலங்களையும், பிரதிகூலங்களையும் மனதில்கொண்டு அவ்விஷயங்கள் ஆராயப்பட்டன. எதிரிகளின் பலத்தை முற்றிலும் உணர்ந்தே நாங்கள் இவ்வாராய்ச்சியை நடத்தினோம். யுத்தத்திற்காக எல்லாவிதமான தளவாட உற்பத்தி விஷயத்தில் மொத்தத்தில் நிலைமை நம்பிக்கையூட்டுவதாகயிருக்கிறது. மாத உற்பத்தி அளவு ஆரம்ப திட்டப்படி இன்னும் உச்ச நிலையை அடையவில்லை. ஆனால் அந்த அளவு வேகமாகப் பெருகிவருகிறது.

"யுத்தம் உலகின் பல்வேறு பாகங்களுக்குப் பரவி விட்டதால், துருப்புகள், யுத்த தளவாடங்கள் இன்னும் மற்ற பொருள்கள் ஆகிய இவைகளை ஆங்காங்கு கொண்டுபோய்ச் சேர்ப்பமதே நமக்கு முக்கிய பிரச்னையாயிருந்து வருகிறது. அச்சுநாட்டு ஸப்மரீன்கள் நமது சாமான் கப்பல்களுக்கு இன்னும் பெருஞ்சேதம் விளைவித்து வருகின்றனவாயினும், புதிய கப்பல் உற்பத்தி மாதத்துக்கு மாதம் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. இச் சம்பாஷணையில் ஏற்பட்ட முடிவையொட்டி பிரிடிஷ், அமெரிக்கக் கடற்படைகள் ஒன்றுசேர்ந்து நேசநாடுகளுக்கு வரும் சாமான் கப்பல்களுக்கு எதிரிகள் விளைவிக்கும் சேதத்தை இன்னும் குறைக்க முயற்சிக்குமென்று நம்பப்படுகிறது. யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கான முறையில் இவ்வளவு பூரணமான அபிப்பிராய ஒற்றுமையும், திட்டங்களும் இதற்கு முன் ஒருபொழுதும் ஏற்பட்டதில்லை".

## வெகு தீரமான எதிர்ப்பு.

"ஜெர்மனியின் முக்கிய தாக்குதலுக்கு இலக்காகியிருக்கும் ருஷ்யா எதிர்த்து நிற்கும் முறையைக் கண்டு நாங்கள் பாராட்டுகிறோம். சீனப் படைகள் எதிரிகளை வெகு தீவிரமாக எதிர்த்து நிற்பதைப் பார்க்க எங்கள் சந்தோஷத்திற்கு அளவில்லை.

"ஜப்பானுக்கு விரோதமாகவும், சீனவுக்கு நிவாரணமளிக்கவும் எடுத்துக் கொள்ளவேண்டிய நடவடிக்கைகளைக் குறித்து நாங்கள் எங்களுடைய ராணுவ ஆலோசகர்களுடன் கலந்து பேசினோம். பல காரணங்களை முன்னிட்டு நாங்கள் எங்கள் திட்டங்களை வெளியிடுவதற்கில்லை. ஆனால் வாஷிங்டனில் நாங்களும், எங்கள் ராணுவ ஆலோசகர்களும் கலந்து யோசனை செய்து இனி எடுத்துக் கொள்ளும் நடவடிக்கையின் மூலம், ஜெர்மன் படைப் பலம் ருஷ்யப் போர்முனையி னின்றும் வேறு முனைகளுக்குத் திரும்புமென்று சொல்லலாம்.

"பிரதம மந்திரியும், ஜனதிபதியும் இதற்குமுன் 1941-ம் ௵ ஆகஸ்டு மாதத்திலும், அதற்குப் பிற்பட்டு 1941-ம் ௵ டிஸம்பரிலும் ஆக இருமுறை சந்தித்து யுத்த சம்பந்தமாக கலந்து பேசியிருக்கின்றனர். நாம் வெற்றி பெறுவதற்கு, சென்ற வருஷம், ஆகஸ்டு அல்லது டிஸம்பர் மாதத்தில் இருந்ததைவிட இப்பொழுது மொத்தத்தில் யுத்த நிலைமை அதிக அனுகூலமாயிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை.

---

## பருந்துப் பாய்ச்சல் விமானம்.

விமானப்படைத் தலைவர் L. V. பிரேசர் எழுதியது

(லண்டனிலிருந்து ஸ்பெஷல் கேபிள் மூலம் கிடைத்தது).

பாய்ச்சல் விமானங்களைக் குறித்து பிரிடிஷ் விமான அதிகாரிகள் எவ்வித அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள்? அவர்கள் இவ்விமானத்தை அதிகம் நிந்திப்பதாக அவர்கள்பேரில் குற்றம் சாட்டப்படுகிறது. "12 சண்டைகளின் அனுபவத்தை அவர்கள் கவனிக்கவில்லை" என்றும் ஒரு குற்றம் சாட்டப்படுகிறது. எல்லாம் இந்தப் பாய்ச்சல் விமானங்கள் காரணமாக விமான அதிகாரிகளுக்கு எவ்வளவோ நிந்தனை ஏற்பட்டிருக்கிறது.

### ஆனல் உண்மை என்ன?

பாய்ச்சல் விமானங்களைப்பற்றி விமான அதிகாரிகள் ஒரு நாளும் நிந்தித்துப் பேசியதுமில்லை, அதனல் ஏற்படும் சாதகத்தையும் மறைப்பதுமில்லை. பிரிடிஷ் விமானப்படையின் ஒரு அங்கமாக பாய்ச்சல் விமானங்களின் படையும் சேர்ந்திருந்தால, விமான அதிகாரிகளுக்குத் திருப்தியாகவே இருக்கும்.

### முதல் விஷயம் முதலில் கவனிக்கப்படும்.

யுத்தம் ஆரம்பித்ததும் பிரிடிஷ் விமானப் படையைப் பலப்படுத்திக் கொள்ளவேண்டிவந்தது. அதைக் கிரமமாக சமயத்திற்கேற்றவாறும் செய்ய வேண்டி வந்தது அதற்காக சில அம்சங்களும் முக்கியமாக இருந்தன. அதாவது ஒரு பெரிய பைடர்படை முக்கியமானது. இவ்விஷயம் பிரிடனமேல் நடந்த விமானப்போரிலிருந்து கண்டுகொள்ளப்பட்டது. ஸ்பிட்பையர், ஹரிக்கேன் விமானங்களைப்போல் பருந்துப் பாய்ச்சல் விமானமும் தாக்கமுடியுமா? அடுத்தபடியாக பிரிடனிலிருந்து ஜெர்மனி வரை சென்று தாக்கக்கூடிய பாம்பர்களைப் பலப்படுத்தவேண்டியிருந்தது. பருந்துப் பாய்ச்சல் விமானங்கள் பிரான்ஸிலிருந்துதான் ஜெர்மனிக்குச் செல்லமுடியும். ஆனல் பிரான்ஸை பிரிடன் உபயோகித்துக் கொள்ளமுடியவில்லை.

பிறகு விமான அதிகாரிகள் பிரிடனில் செய்யப்படும் உற்பத்தியைக்கொண்டு சமீபத் தேவைகளை ஈடுசெய்துவந்தார்கள். அது மாதிரி நீடித்து நடந்துவருகிறதே ஒழிய வேறு விஷயங்களை விருத்திசெய்ய முடியவில்லை.

### யுத்தத்திற்கு முன்னிருந்த அனுபவங்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் பிரிடிஷ் விமான அதிகாரிகள் பருந்துப் பாய்ச்சல் விமானங்களின் உபயோகத்தைப்பற்றி பரிசீலனை செய்ய ஆரம்பித்தார்கள். யுத்த ஆரம்பத்திற்கு வெகுகாலத்திற்கு முன்பு பிரிடனில் பருந்துப் பாய்ச்சல் விமானங்கள் கட்ட ஆரம்பிக்கப்பட்டன. ஹார்ட் என்ற விமானத்தைக் கட்டி பாய்ச்சல் விமானமாக உபயோகிக்கப் பார்த்தனர். அது பிரயோஜனப்படவில்லை. உடனே அமெரிக்காவிற்கு பருந்தும் பாய்ச்சல் விமானங்களை அனுப்ப ஆர்டர் கொடுக்கப் பட்டது.

அது 1940-ம்ஹூ ஜூலைமீ த்தில்தான் காமன்ஸ் சபையில் சமீபத்தில் சொல்லியபடி இப்பொழுதுதான் அவை அங்கிருந்து வந்துகொண்டிருக்கின்றன. ரகசியமாக வைக்கப்பட்ட ஹாலிபாக்ஸ் விமானம் இப்பொழுது பகிரங்கமாகி விட்டது. ஹலிபாக்ஸ் விமானங்களைச் சேர்த்துக்கொள்ள 19 மாதங்களுக்கு முன்புதான் தீர்மானிக்கப்பட்டது. அதற்குத் திட்டங்கள் 5 வருஷங்களுக்கு முன்னமேயே தயாரிக்கப்பட்டுவிட்டன. புது மாதிரி விமானம் கட்டுவதற்கு மூன்று வருஷங்கள் காகிதத்தில் பிளான்கள் வரைந்திருந்தபடி உற்பத்திக்கு வருவதில் அதிக காலதாமதம் ஏற்பட்டிருக்கிறதாகச் சொல்லுவதற்கில்லை. உடனே நேசநாடுகளும், அச்சு நாடுகளும் பருந்துப் பாய்ச்சல் விமானங்களைக் கட்ட ஆரம்பித்துவிட்டன. ஆனல் பருந்துப் பாய்ச்சல் விமானத்தின் சக்தி எவ்வளவு?

### குறிபார்த்து குண்டுபோடுவது.

பருந்துப் பாய்ச்சல் விமானங்களில் திடீரென்று திரும்புவதற்கான கருவிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பாய்வதற்குத் தக்கவாறு பிரேக்குகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. அவைகளின் உதவியால் 60° கோணவடிவிலும் பாயக்கூடும், ஜெர்மன் ஸ்தூக்கா விமானங்களை உசத்தியாகச் சொல்லுவதுமுண்டு. பிரிடிஷ் விமானப்படையில் இதற்குத் தகுந்த விமானம் இருக்கின்றன. கொஞ்சம் திரும்பித் தாக்கினல் குறியைப் பார்த்துத் தாக்கமுடியும்.

ஹெர்மிஸ் போன்ற விமானமேற்றும் கப்பல் மூழ்கியபிறகும் பிரிடன் ஏன் பருந்துப் பாய்ச்சல் விமானங்களைக் கட்டவில்லை என்று கேட்கிறார்கள். உண்மையில் ஹெர்மிஸ் பருந்துப் பாய்ச்சல் விமானங்களால் மூழ்கடிக்கப்படவில்லை. ஆனல் அதிக உயரம்பறக்கும் பல விமானங்களால் மூழ்கடிக்கப்பட்டது. அவ்வித சந்தர்ப்பங்களில்தான் பாய்ச்சல் விமானங்கள் உபயோகிக்கப்படும். விமான ஆதிக்கம் இருக்கும் சந்தர்ப்பத்தில் வெற்றிகரமாக லக்ஷியத்தைத் தாக்கும். குண்டுகளைப் போடுவதற்குள் கீழிருந்து தன்னை விமான எதிர்ப்பு பீரங்கிகள் தாக்காமலிருக்கும்படி ஒரு நொடியில் பலவிதமாகப் பாய்ந்து லக்ஷியத்தைத் தாக்கும்.

### பாதகமான அம்சம்.

துருப்புகளின் நிலயங்களை பாய்ச்சல் விமானங்கள் தாக்குவதைப்பற்றி அதிகம் சொல்லப்பட்டிருக்கிறது. விமான ஆதிக்கம் இருக்கும் ஸ்தலங்களில் இது சரியான முறைதான். இருந்தாலும் பல பீரங்கிகளுள்ள ஸ்பிட்பையர், ஹரிகேன்களைப்போல் அவ்வளவு கடுமையாக இதனல் தாக்குதல் செய்ய முடியாது. நவீன பைடர் விமானத்தைக்கொண்டு பருந்துப் பாய்ச்சல் விமானத்தைச் சுட்டுத்தள்ளிவிடலாம். பிரிடன்மேல் நடந்த விமானப்போர், மால்டா

முதலியவை இதற்குத் திருஷ்டாந்தமாகும். சிறிய விமான எதிர்ப்பு பீரங்கிகளாலும் இதைச் சுடமுடியும். ஆனால் கீழிருக்கும் மனிதன் விமானமிறங்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். எப்படியிருந்தாலும் விமான ஆதிக்கம் இருந்தால்தான் வெற்றியடைய முடியும். பிரிடிஷ் விமானப் படையும் பல சந்தர்ப்பங்களில் பருந்துப் பாய்ச்சல் விமானங்களைக்கொண்டு வெற்றியடைந்திருக்கிறது. வரவர நிலைமை மாறிக்கொண்டே வருகிறது. தேவைக்குத் தக்கவாறு பருந்துப் பாய்ச்சல் விமானங்களும் உபயோகப்படுத்தப்படும்.

---

# ஜெர்மனியின் உள்நாட்டு நிலை.

## சாமான்களின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யப்படும் ஏற்பாடுகள்.

(லண்டன் டைம்ஸ் பத்திரிகையிலிருந்து).

ஜெர்மனியின் வசந்தகாலத் தாக்குதல் பலமாகச் செய்யப்பட்டாலும் அதற்குக் கிடைக்கும் பயன் ஜெர்மனியின் உள்நாட்டு நிலையைப் பொறுத்திருக்கிறது. ஜெர்மனியின் யுத்த முஸ்தீபப்பு பெரிதாயும், அதிக சிருங்கலையுள்ளதாகவும் இருப்பதால் தவறுதலன்னியில் ஒவ்வொரு அங்கங்களும் சரியாக நடந்துகொண்டால்தான் வெற்றியடையலாம்.

எதிர் பாராதவிதமாக ருஷ்யப் போர்முனையில் ஜெர்மானியர்களுக்கு ஏராள சாமான்களும், மனிதர்களும் நஷ்டம். அதே விதமாக ருஷ்ய ரிஸர்வ் படைகளும் தைரியமாகச் சண்டை செய்தனர். ஆகவே ருஷ்யர்களின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு லாயக்கான படையை முதலில் திரட்டிக்கொண்டு, அதன் பிறகு வசந்த காலத் தாக்குதலை செய்யவேண்டியதில் ஜெர்மனி கவனம் செலுத்தவேண்டியிருந்தது. இதற்காக ஜெர்மனியில் பல வேலைகளில் ஈடுபட்ட பொது மக்களை வயது முதலியவைகளை கவனியாது சைனியத்தில் சேர்க்க ஏற்பாடாயிற்று. நடுநிலை நாடுகளான ஸ்வீடன், ஸ்விட்ஸர்லாந்து, ஸ்பெயின், போர்ச்சுகல், துருக்கி முதலியவைகளிலிருக்கும் ஜெர்மானியர் அழைத்துக்கொள்ளப்பட்டனர். ஹங்கேரி, ருமேனியா போன்ற நாடுகளிலும் புதிய சைனியங்கள் சேகரித்துக் கொடுக்கப்பட்டன. இவ்விதமாக பல நாடுகளிலிருந்து சேர்க்கப்பட்ட சைனியத்தில் ஜெர்மானியர் மாத்திரம் அடங்கிய சைனியத்தில் இருக்கும் தன்மை காணப்படவில்லை.

### குறைந்த சக்தி.

ஜெர்மனியில் பலவித வேலைகளில் ஈடுபட்டவர்களை வைத்துக்கொண்டதால், தொழிற்சாலைகள் சரிவர நடைபெறவில்லை. இதற்காக வேறு சில தந்திரங்கள் கண்டுபிடிக்கவேண்டியதாயிற்று.

முன்பு பொதுஜனங்களுக்கு உபயோகப்படும் சாமான்களை ஜெர்மன் தொழிற்சாலைகள் 60 சதவிகிதம் உற்பத்தி செய்தன. இப்பொழுது ஐந்தில் ஒரு பகுதிதான் உற்பத்தி செய்யப்படுகிறது.

வெறும் ஆட்டு மந்தைகளைப்போல் சைனியத்தில் ஆட்களைச் சேகரித்து யுத்த சக்தி குறைந்தது போல, தொழிற்சாலைகளிலும் அனுபவமில்லாதவர்களைச் சேர்த்ததினால் சாமான் உற்பத்திவேகமும் குறைந்துவிட்டது. இருந்தாலும்,

மூர்த்தியைவிட அதிக சாமான் உற்பத்தி செய்துவிடலாம் என்று மாத்திரம் சொல்லப்பட்டு வந்தது. சமீபத்தில் ஜெர்மன் தொழில் மந்திரி, "இரண்டு உண்டான இடத்தில் மூன்று" அதாவது 50 சதவிகிதம் அதிகமாக இருக்க வேண்டுமென்று சொல்லிவந்தார்.

### அயல் தேசத்தினரும், ஸ்திரீகளும்.

ஜெர்மனியில் யுத்தத்திற்கு முன்னிருந்ததைவிட அதிக வேலைக்காரர்கள் இருக்கிறார்களா என்பது கவனிப்பது கஷ்டம். ஏரத்தாழ்வுகள் இருக்கத்தான் இருக்கும். ஏனென்றால் புருஷர்களை ராணுவ சேவைக்கு அழைத்துக் கொண்டதும், அந்த இடத்திற்கு ஸ்திரீகள் சேர்ந்து கொள்ளுகிறார்கள். பெண்களும், பையன்களும் பள்ளிக்கூடத்தை விட்டு தொழிற்சாலைகளில் சேர்ந்து கொள்ளுகிறார்கள். வயது முதிர்ந்த வேலைக்காரர்கள் இறந்துபோவதால், இதற்காக அயல் நாட்டிலிருந்து தொழிலாளிகள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். தற்போது கிடைத்துள்ள கணக்கைப் பார்த்தால் 1939-ஐ விட குறைவாகத்தான் காணப்படுகிறது. அயல் நாட்டுத் தொழிலாளிகள் இதில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். (ஆனால் தோட்டங்களிலும், ரஸ்தா போடுவதிலும் ஈடுபட்டிருக்கும் 20,00,000 கைதிகள் இதில் சேர்க்கப்படவில்லை). ஆகவே எண்ணிக்கை அதிகமும் இல்லை, வேலை நேர்த்தியுமில்லை.

1939-ல் வேலைபார்த்துவந்த ஸ்திரீகளின் எண்ணிக்கை 53,00,000. தற்சமயத்தில 94,00,000 இருக்கிறார்கள். இந்த 11,00,000 அதிக எண்ணிக்கையில் 7,50,000 ஜெர்மன் ஸ்திரீகள். ஸ்திரீ வேலைக்காரர்களின் எண்ணிக்கை 1,00,00,000 அதிகரிக்கலாமென்று எதிர் பார்க்கப்படுகிறது. அந்த எண்ணிக்கை கைகூடினால் 10,00,000 அதிகமான ஜெர்மன் ஸ்திரீகள் புருஷர்களின் வேலைகளில் ஈடுபடலாம்.

பல காரணங்களை முன்னிட்டு அயல்நாட்டு வேலைக்காரர்களை உபயோகித்துக் கொள்ள முடியாது. ஜெர்மன் தொழிற்சாலை வேலைக்காரர்களைப்போல் அயல் நாட்டு வேலைக்காரர்கள் காரியங்களைச் செய்யவில்லை. ஜெர்மன் தொழிலாளிகள் 90,00,000 லிருந்து 1,20,00,000 வரை இருக்கலாம். அயல் நாட்டு தொழிலாளிகளின் எண்ணிக்கை 30,00,000 தான். ஒருக்கால் 40,00,000 வரை அதிகமாகலாம். இவர்களில் யாருக்காவது ஜெர்மனி வெற்றியடைய வேண்டுமென்ற விருப்பமே கிடையாது. சொந்த நாட்டில் வேலையில்லாததால் ஜீவனத்தை முன்னிட்டே ஜெர்மனியில் உழைக்க ஒத்துக்கொண்டார்கள். நாஸிக் கொள்கையை இவர்கள் விரும்பவில்லை. ஜெர்மன் வெற்றியைக் கண்டு சந்தோஷமடையவுமில்லை. போலந்துக்காரர்களும், ஸெக்கர்களும் ஜெர்மன் தோல்விகளில் சந்தோஷமடைகிறார்கள்.

### மனமில்லாத தொழில்காரர்கள்.

ஜெர்மனியிலிருக்கும் அயல்நாட்டு தொழிலாளிகள் பி. பி. ஸி. ஒலிபரப்பை எப்படியோ கேட்டுவிடுகிறார்கள். பிறருக்குப் பரவவும் செய்கிறார்கள். உணவு, வேலை செய்யும் சந்தர்ப்பங்கள் முதலியவைகளைப்பற்றி சதா புகார் செய்து கொண்டே இருக்கிறார்கள். இவர்களை ஜெர்மானியரிடமிருந்து பிரித்தால் தான் தொழில் நன்றாக நடக்கும். இதற்காக முதலில் 6 மாதங்களுக்கு நியமிக்கப்படுகிறார்கள். பாஷை, மதம் பழக்கம் முதலியவைகளில் தகராறுகள் ஏற்படுகின்றன. எவ்வளவு கெடுதல் இருந்தபோதிலும் மீண்டும் ஆக்கிரமித்த நாடுகளிலிருந்து வேலைக்காரர்கள் சேகரிக்கப்படுகிறார்கள்.

ஜெர்மானியர்கள் யுத்த சாமான்கள் செய்யவே நியமிக்கப்படுகின்றனர். அயல் நாட்டினர் பொதுமக்களின் தேவைக்கான சாமான்களை செய்கின்றனர். இந்த வருஷம் முதற்கொண்டு ஆக்கிரமித்த நாட்டிலுள்ளோரையும் யுத்த

சாமான் செய்ய நியமிக்கப்படுகிறது. நிலக்கரிச் செலவு, போக்குவரவு சிரமம் முதலியவை இல்லாமலிருப்பதற்காக சில தொழிற்சாலைகள்தான் நடத்தப்படுகின்றன.

### விசேஷ முறைகள்.

முன்பு இருந்ததைவிட உத்தியோகஸ்தர்களின் முறை குறைந்துவிட்டது. படிப்பு அனுபவம் எல்லாவற்றையும் உபயோகப்படுத்தும்படி சாமான் உற்பத்தி செய்வோருக்கு கட்டளையிடப்பட்டிருக்கிறது. ஆபீஸ் வேலையைக் குறைப்பதற்காக வேலைக்காரர்களுக்கு மாதம் ஒருமுறை சம்பளம் போடப்படுகிறது. தொழிலாளிகள் ஒரே வயதுள்ளவர்களாகப் பொருக்கப்பட்டு நியமிக்கப்படுகின்றனர். தானாக வேலை செய்யும் யந்திரங்களில் ஒரு அனுபவமுமில்லாதவர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

அனுபவத்தில் தினம் 10 மணி நேரம்தான் தொடர்ச்சியாக வேலை செய்ய முடியும். இவ்விதம் வேலை செய்யக் கூடியவர்களை சைனியத்தில் சேர்ப்பதில்லை. ராணுவ சேவைக்காக ஆட்களை அனுப்பும்படி கேட்டால் தொழிற்சாலை எஜமானன் திறமையில்லாதவனைத்தான் அனுப்புவான்.

இவ்விதமான சிரமங்களால் ஜெர்மன் சைனியம் அதிகமான சக்தி வாய்ந்ததாக ஆகவில்லை. மறைவாக ரிஸர்வ் படைகள் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. முடிந்தவரை யந்திரங்களையே உபயோகித்துக்கொண்டு மனிதர்கள் ராணுவ சேவையில் ஈடுபட்டிருக்கிறார்கள். இவைகளின் பயன் என்னவாகும் என்று அச்சு நாட்டினரும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

---

# ரூன்ஸ்டெட்டின் தலைமைப் பதவி மாறுதலின் பயன்.

# மார்னே சம்பவம்போல் இப்பவும் நேரலாம்.

(**'அப்ஸெர்வர்'** என்ற பத்திரிகையிலிருந்து).

## *1914-ம்வருடமும்—1942-ம்வருடமும்.*

1914-ம்வருட செப்டம்பர்மாதத்திலிருந்த தோற்றத்திற்கும் இந்த வசந்தகால புதுத்தோற்றதிற்கும் மாறுதல் அதிகமிருக்கிறது. ஆனால் ஒரு விஷயத்தில் மட்டில் ஒற்றுமை இருக்கிறது. ஐரோப்பா கண்டத்தில் ராஜீய விஷயத்திலும், ராணுவ நடவடிக்கையிலும் சென்ற சில நாட்களாகவே சில முக்கிய சம்பவங்கள் நடைபெற்றுவருகின்றன.

### மாரிகாலப் போர்.

சென்ற சில நாட்களில் ஜெர்மானியர்கள் எதிர் பார்த்ததற்கு மாறாக மாரிகால யுத்தம் உன்னத நிலையை அடைந்தது. மாஸ்கோ, லெனின்கிராட், ரோஸ்டவ் முதலிய நகரங்களுக்கு வெளிப்புறங்களிலேயே நாஸிகள் நிற்கும்படி தடைபட்டிருக்கிறார்கள். இந்த போரரண் நெடுகிலுமுள்ள ஜெர்மானியர்கள் இருக்கும் ஸ்தானங்களின் பலாபலத்தை ருஷ்யத் துருப்புகள் அடிக்கடி பரிசோதித்து வருகிறார்கள். ஜெர்மனியின் பாதுகாப்பு வரிசைகளில் எங்கேனும் ஒரு இடத்தில் ஒரு திறப்பு காணப்பட்டால் ஜெர்மனியின் பூரா பாதுகாப்பு முறைக்கு அழிவுநேரிடும்.

கடுமையான குளிர்காலத்தில் ஜெர்மானியர்கள் கிழக்குப்போர்முனையில் பிரதானமான 100 படைப் பகுதிகளுக்கு மேலேயே உபயோகித்து சமாளித்து வந்தார்கள். ருஷ்யாவில் டிஸம்பர் மாதத்தில் கடுமையான எதிர்ப்புக்காக வரவழைக்கப்பட்ட சைனியங்களான வாபென் (Waffen S. S.) பகுதி, ஆஸ்திரியாவிலிருந்தும், பவேரியாவிலிருந்தும் வந்த ஆல்பைன் துருப்புகள், தளகர்த்தர் ஸ்டேடெண்ட்ஸின் கீழுள்ள குடைப்படைகள் தறபோது தரைச்சண்டை செய்யத் தயாரானவர்கள், குடீரியனுக்குட்பட்ட பான்ஸர் பகுதிகள், இவைகளும் அந்த 100 பகுதிகளில் அடங்கியிருந்தன.

இவ்வீரர்கள் மிக்க துன்பத்தை அடைந்தார்கள். ஆனால் சிற்சில இடங்களில் நினைக்கப்பட்டபடி அவர்களுக்கு அதிகத் துன்பம் நேரிடவில்லை. இருந்த போதிலும் அவர்களுக்கு நேரிட்ட சேதம் முக்கியமான விஷயமல்ல. ஆனால் ஜெர்மன் ஸ்தாபனம் எதிர் பார்த்ததற்கு மேல் அவர்களுக்கு நஷ்டம் நேர்ந்தது தான் முக்கியமாகக் கவனிக்கத்தக்கது. இதிலுள்ள வித்தியாசம் அதிகம் தான்.

## புதிய நாஸித் துருப்புகள்.

முன்னணியிலுள்ள 100 படைப்பகுதிகளுடன் புதிதாகத் கைத்தொழிலிலும், விவசாயத்திலும் ஈடுபட்டிருந்த மனிதர்களைக்கொண்டு சேகரிக்கப்பட்ட 80 முதல் 100 படைப்பகுதிகளும் உதவியாகச் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. புதுத் துருப்புகள் என்றால் எல்லா விதத்திலும் அவை புதியவைதான். முந்திய ஜெர்மன் பகுதிகளில் உள்ளவர்களைக் காட்டிலும் இவர்களுக்கு வயது அதிகம். இவர்கள் காலத்தில்தான் நாஸி ஆட்சியை யாதொரு மறுப்பின்றி யாவரும் ஒப்புக்கொண்டார்கள். ஆனால் நாஸிக் கொள்கையில் மூட நம்பிக்கை கொண்டவர்களல்ல.

இவர்களின் பலக்குறைவை நாஸிகள் அறிந்துள்ளார். யுத்தத்திற்காக அப்புதுத் துருப்புகளைப் பரவச்செய்வதில் ஒரு விசேஷ சிரமம் இருக்கிறது. பிரான்ஸிற்காவது, ஹாலந்திற்காவது அல்லது நார்வேக்காவது அவர்களை அனுப்பத் துணியவில்லை. அவர்கள் கிழக்குப் போர்முனைக்கு அனுப்பப்பட்டு அங்குள்ள நல்ல பயிற்சிபெற்ற நாஸித் துருப்புகளுடன் கலந்துகொள்ள வேண்டியது, என்றே ஏற்பாடாயிற்று.

## பிரான்ஸுக்கு ரூன்ஸ்டெட் வருவதற்குக் காரணமென்ன?

விஷி அரசாங்கத்தில் நாஸிகள் தாக்கியதும், வான் ரூன்ஸ்டெட் பிரான்ஸுக்கு வந்துசேர்ந்தது இவற்றிற்கு ஆதாரமாக வைத்துப்பார்க்க வேண்டும். இதுவரை வான்ரூன்ஸ்டெட் திட்டங்களைத் தயாரித்து, உத்தரவிடும் தலைமை அதிகாரியாக இருந்ததில்லை. அதற்கு மாறாக ஜெர்மன் ஸ்தாபனம் போட்ட திட்டங்களை வெற்றிகரமாகக் காகஸைஸ நோக்கி முன்னேறிச் செல்ல அவர் ஜெர்மன் சைனியத்திற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். திடீரென்று அவரை வரவழைத்ததில் தலைமை அதிகாரிகளை மாற்றுவது மட்டுமல்ல, அதில் இன்னும் ஒரு விசேஷமிருக்கிறது.

இதுவரை ஜெர்மனி பிரான்ஸில் 20 அல்லது 30 படைப்பகுதிகளை வைத்திருந்தது. ஆனால் அத்துருப்புகள் அதே இடத்திலிருந்துகொண்டு பாதுகாப்பு சேவை செய்துவந்தன. பிரான்ஸில் படையெடுப்பு கோஷ்டிகளும், தாக்குதல்களும் அதிகரித்தவுடன் எதிரிகளின் பாதுகாப்பு நிலையில் பலவந்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பகுதிகளைக்கொண்டு தாக்குதலில் கருத்தில்லாத தளகர்த்தர் செய்யக்கூடியதும் ஒன்றுமில்லை. அவரைக்காட்டிலும் இந்தப் படைப் பகுதிகளை வைத்துக்கொண்டு ரூன்ஸ்டெட்டும் அதிகம் ஒன்றும் செய்துவிட முடியாது.

### ருஷ்யாவிலிருந்து அவர் வரவழைக்கப்பட்டார்.

வான்ருன்ஸ்டெட் வரும்பொழுது வழக்கமாக அவருடன் ஈடுபட்டிருக்கும் கவசப்படைகளுடனும் அவர் பிரான்ஸுக்கு வந்திருப்பார் என்று நாம் நிச்சயமாக எண்ணலாம். இந்த கவசப்படைகள் கிழக்குப் போர்முனையிலிருந்துதான் வந்திருக்கக்கூடும். தளகர்த்தர் ரோமல் வசம் உபரியான சைனியங்கள் இல்லாததினால் அவர் சைனியங்கள் உதவிக்கனுப்ப முடியாது. பால்கன் தேசத்தார்களிடமும் ரொம்பக் குறைவாகத்தான் கவசப்படைகள் ஸப்ளை செய்யப்பட்டிருக்கின்றன. ஜெர்மனிக்குள் வைக்கப்பட்டிருக்கும் ரிஸர்வ் படைகள் வேறு வழியில்லை என்றாலொழிய வரவழைக்கப்படமாட்டா. அதனால் கீவ், ஸ்மொலென்ஸ்க், நீப்பர் இந்த இடங்களில் சேகரிக்கப்பட்ட பான்ஸர் படைப்பகுதிகளிலிருந்துதான் வரவழைக்கப்படவேண்டும்.

பிரான்ஸ் மறுபடி யுத்தத்தில் புகுந்ததில் சமுத்திரத்தில் நேசதேசத்தார்களுக்கு மோசமான நடவடிக்கைகள் நிகழ்ந்திருக்கின்றன. ஆனால் தரைச் சண்டையில் அதிக சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தாக்குதல் ஆரம்பமாவதற்குமுன் ருஷ்யர்கள் சமநிலைமையை அடைந்திருப்பதிலும், ருஷ்யர்கள் அவர்கள் நாட்டில் ஆகாயச் சண்டையில் ஆதிக்கம் பெற்றிருப்பதிலும், நாஸிகள் இப்பொழுது அங்குள்ள தங்கள் படைப் பலத்தைக் குறைத்துவிட்டால், அவர்களுக்குக் கடுமையான சேதம் ஏற்பட்டு மார்னேயில் சென்ற யுத்தத்தில் நடந்ததுபோல் மறுபடியும் ஏற்படும்.

### மார்னேயும், நீபரும்.

அம்மாதிரி நடப்பதற்கு முதல் படியாக பிரெஞ்சுக் கப்பற்படையை அவர்கள் உபயோகித்தார்கள். இதனால் கிழக்குப் போர்முனையில் ஜெர்மனியின் பாதுகாப்பில் பலக்குறைவு ஏற்பட்டு வருவதுபோல் காணப்படுகிறது. இப்பொழுது நேசதேசத்தார்கள் ஒன்றுசேர்ந்து யுத்த தந்திரத்துடன் நடந்துகொண்டால், ருஷ்யாவிற்கு மேற்கேயுள்ள நேசதேசத்தார்கள் உண்மையாகவே ஜெர்மனியின் பலத்தைக் குறைத்துவிடலாம். அப்படி நடந்தால் போரோடினேவிலும், நீப்பரிலும் இதுசமயம் முந்தி மார்னேயில் நடந்த மாதிரிதான், ஏற்படும்.

1914-ம் வருஷத்தில் மார்னேயில் நடந்ததின் பயனாகத்தான் 1918-ம் வருஷத்தில் கெய்ஸர் தோல்வியடைந்தது. ஆனால் 1942-ம் வருஷத்தில் சம்பவங்கள் வெகு துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

---

## ஜப்பான் சீனாவில் ஜயித்த நாடுகளை ஒன்றுபடுத்த விரும்புவது ஏன்?

(ஸர்டோக்ளஸ் பிரௌன்ரிக் என்பவர் எழுதியது).

வெவ்வேறு இடங்களில் அபிவிருத்தியடைந்துவரும் சம்பவங்களினால் சீனாவில் விபரீதமாக நடந்துவருபவைகளை நாம் கவனியாமல் இருந்துவிடக்கூடாது. கருங்கடலிலும், பால்டிக் சமுத்திரத்திலும் ஏற்படும் நிகழ்ச்சிகளைப்பற்றி சிந்திப்பதற்கு முன்னதாகவே சீனாவில் நடந்துவருவதைப்பற்றி, நமது கவனத்தைச் செலுத்தவேண்டியது மிக்க அவசியம்.

சென்ற டிஸம்பர் மீ 7உ பேர்ல் துறைமுகத்தைத் தாக்கி, யுனைடெட் ஸ்டேட்ஸுடன் ஜப்பான் யுத்தத்திலிறங்கியபொழுது தொடர்ந்தாற்போல் நான்கு வருஷங்களாக ஜப்பானியர்களுடன் போர் செய்துவரும் சீனர்களுக்கு ஓய்வு கிடைக்கும்போல் தோன்றிற்று. சீனாவிலிருந்த ஜப்பானியத் துருப்புகளை பிலிப்பைன்ஸ் தீவுகளிலும், மலேயாவிலும் தாக்க அனுப்பப்பட்டிருக்கும் துருப்புகளுடன் சேர்த்துகொள்ளுவதற்காக வரவழைத்த செய்தி கிடைத்தவுடன் இந்த நோக்கம் ஊர்ஜிதமடைந்தது.

## பின்புறமாக முன்னேறுதல்.

ஆனல் துரதிர்ஷ்டவசமாக ஜப்பானியர்களுக்குத் துரிதமாக வெற்றி கிடைத்து, 6 மாத காலத்திற்குள்ளாகவே சீனவுக்குப் பின்புறமாக லாஷியோவழியாகவும், பர்மா ரஸ்தா வழியாகவும் ஜப்பானியத் துருப்புகள் சீனவை அடைந்திருக்கின்றன. பிரிடன், அமெரிக்கா இந்த தேசங்களில் தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்ட முக்கியமான பொருள்களை சீனவுக்குக் கொடுத்து உதவிவந்ததில், ரெங்கூனிலிருந்து யூனன் மாகாணம் வரைக்கும், சீனவுக்கு ஜீவனடியாகயிருந்த ஸப்ளை மார்க்கம் முழுவதும் இப்பொழுது ஜப்பானியர்களின் ஆதிக்கத்தில் வந்துவிட்டது. இந்த ஸப்ளை மார்க்கம் துண்டிக்கப்பட்டது மட்டுமல்ல. அந்த வழியாகவே பருவக்காற்று ஆரம்பமாவதற்கு முன் பர்மா பூராவும் வியாபித்துக் கொண்ட ஜப்பானியத் துருப்புகள் மேறகிலிருந்து சீனவின் உயிர் நிலையான ஸ்தானங்களில் முன்னேறுவதற்கு ஹேதுவாய்விட்டது. தற்சமயம் சுங்கிங்கை நோக்கி இந்த மார்க்கம் வழியாக, ஜப்பானியத் துருப்புகள் முன்னேறி வருகின்றன. இதே சமயத்தில் சிகியாங் மாகாணத்தில் தெற்கு சீன கடற்பிரதேசத்தில், மற்ற ஜப்பானியத் துருப்புகளும், புதிது புதிதாகத் தாக்குதல்களை நடத்திவருகின்றன. இந்தப் பிரதேசம் ஷாங்கேயிக்கு அடுத்த தென்புறத்தில் இருக்கிறது. வங்காளக் குடாக் கடலிலிருந்து பவளக் கடல் வரைக்கும் எல்லைப் புறத்தில் முன்னேறிச் சென்ற ஜப்பானியத் துருப்புகள் வியாபித்திருக்கும் பொழுதே சீனவை விழுங்கிவிடவும், ஆஸ்திரேலியாவிலிருந்தாவது, இந்தியாவிலிருந்தாவது அல்லது இரண்டு இடங்களிலிருந்தாவது கண்டிப்பாகத் திரும்பத் தாக்குதல் ஒரு நாள் ஏற்படுமென்று பயந்து தாங்கள் ஜயம்பெற்ற நாடுகளை ஒற்றுமைப்படுத்தவும், ஜப்பானியர்கள் எண்ணங்கொண்டிருப்பது வெளிப்படையாகத் தெரிகிறது. ஜப்பான் கொண்டிருக்கும் கருத்தைப் பூர்த்தி செய்ய இது நல்ல முறையாகத்தான் தோன்றும்.

## அதன் சாதகங்கள்.

முதலாவதாக, அதன் கடற்படை பலம் குன்றுமலிருக்கிறது. ஏனென்றல், கடற்படைக்கு அதிக வேலை கொடுக்கப்படவில்லை. இரண்டாவதாக ரெங்கூன் முதல் நியூ பிரிடன் வரை அரை வட்டமாக 5,000 மைல் நீளத்திலுள்ள எல்லைப்புற ஸ்தானங்களிலிருந்து ஜப்பானியத் துருப்புகள் வெளியிலிருந்து அயல் தேசத்தார்களின் இடையூறில்லாமல் சீன எதிர்ப்பை அழித்துவரக்கூடும். சென்ற யுத்தத்தில் பள்ளங்கள் வெட்டி நடத்திவந்த யுத்த முறையில், தாக்கும் துருப்புகள் தூரத்திலுள்ள லக்ஷியத்தைக் குறித்து நேராகச் செல்லுவது வழக்கம். அந்தத் துருப்புகளுக்கு உதவியாக வேறு கோஷ்டிகள் தயாரிக்கப்பட்டு, வேகமாக முன்னேறிச் சென்ற ஸ்தானங்களுக்குப் பின்னுலுள்ள எதிர்ப்பை அந்த கோஷ்டிகள் அழித்துவிடும். இப்பொழுது ஜப்பானில் இதே முறையை கையாள எத்தனிப்பதாக எனக்குத் தோன்றுகிறது. ஏனென்றல் ருஷ்யாவிலிருந்து வடக்கே வரும் பாதையை வின வேறு வழியில்லாமல், சீன அதன் நேசதேசங்களிலிருந்து தாத்காலிகமாகத் துண்டிக்கப்பட்டிருக்கிறது.

புத்திசாலித்தனம் வாய்ந்த தலைவன் ஒவ்வொருவரும் ஒரு திட்டமில்லாமல் போனல் மறு திட்டம்போட எண்ணியிருப்பான். ஜப்பான் போட்டிருக்கும் திட்டங்களில் ஒன்று கொளும்பு, மடகாஸ்கர் வழியாக ஜப்பானியர்கள் மேற்குப் புறம் முன்னேறிச் சென்று பாஸியன் குடாக்கடலில் வரும் ஜெர்மானியர்களுடன் சேர்ந்துகொள்ளப் பிரயத்தனம் கொண்டிருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. ஆனல் ஐக்கிய தேசங்கள் மடகாஸ்கரை தங்கள் ஆதிக்கத்தில் கொண்டுவந்துவிட்டவுடன் இந்தத் திட்டம் தவறிவிட்டது. மேலும் ருஷ்யாவின் பேரில் ஹிட்லர் செய்துவரும் தாக்குதலை முன்னேறவிடாமல் காலதாமதம் ஏற்பட்டதினல் ஜப்பானியத் தலைவர்களுக்குப் பெருத்த யோசனை செய்யவேண்டியதாயிற்று. ஆகையால் சாதாரணமாக இப்பேர்ப்பட்ட நிலைமையில் ஜெர்மனியுடன் ஜப்பானுக்கு ஏற்பட்டிருக்கும் சிநேகத்திற்காக, ஜப்பானுக்குக் கிடைத்திருக்கும் சாதகத்தைப் பரித்தியாகம் செய்வதைக் காட்டிலும் ஜப்பான் தன்னுடைய அவசரத் தேவைகளைக் குறித்து கவனத்தைச் செலுத்துவதுதான் மேலானது.

### இரண்டாவது திட்டம்.

ஆகையால், சமீபத்தில் நடந்த சம்பவங்களினுல் ஜப்பானியப் பொது ஸ்தாபனம் போட்டிருந்த இரண்டாவது திட்டம் அதாவது, 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்று சொல்லும் வசனத்தைப்போல ஏற்கனவே ஜயமடைந்தவைகளை நன்ருகப் பலப்படுத்தியும், தன்னுடைய எல்லைப் பிரதேசத்திற்குள்ளிருக்கும் எதிர்ப்புகளை அழிப்பதுமான இந்தத் திட்டத்தை அனுசரித்து நடத்திவருகிறதாகத் தெரிகிறது. இதனுல் ஐக்கிய தேசத்தார்கள் எதிரிகளின் மேல் திரும்பத் தாக்குதல் செய்வதற்கு ஆஸ்திரேலியாவிலும், இந்தியாவிலும் தங்கள் படைகளைச் சேகரிக்க அவகாசம் ஏற்பட்டிருக்கிறது. ஆனுல், இம்மாதிரி படை சேகரிப்பதற்காக ஜப்பானியக் கப்பற்படை முன்னேறுமானுல் அதனுல் சமாளிக்கமுடியாது. ஜப்பானியக் கப்பற்படை பந்தோபஸ்து கொடுக்காமல் போனுல் ஜப்பானியர்கள் வியாபித்திருக்கும் பிரதேசம் பூராவும் ஆபத்துக்குள்ளாகிவிடும்.

என்னுடைய அபிப்பிராயங்கள் சரியானுல் ஜப்பானியர்கள் சுயநலம் பாராட்டி நடந்துவருகிருர்களே தவிர பொதுவாக அச்சுநாடுகளின் அக்கரைக்காக இல்லை என்று சொல்லிவிடலாம். ஜப்பானின் உட்கருத்து வெளியாவதற்கு இது ஒரு நல்ல அறிகுறி.

---

## பர்மாவில் இந்திய விமானப்படை.

(ஒன்பது வருஷங்களுக்கு முன்தான் தயாரிக்கப்பட்டாலும் போரில் நன்றகச் சண்டையிடுகிறது).

இந்திய விமானப்படை சமீபத்தில் ஒன்பது வருஷங்களுக்கு முன்தான் தயாராயிற்று. அது பிரிடிஷ் சாம்ராஜ்ய விமானப்படைகளைக் காட்டிலும் கடைசியாக ஸ்தாபிக்கப்பட்டது. இப்பொழுது முதல் தடவையாகப் போரில் ஈடுபட்டிருக்கிறது. அது 1933ஹு எப்ரல்மீ 1-ம் தேதியில் ஏற்பட்டது. அப்படையின் ஒரு பகுதி பர்மாவுக்கு அனுப்பப்பட்டு அதில் ஈடுபட்டவர்கள் யாவரும் புகழுடன் திரும்பினுர்கள். இந்திய ஆகாய விமான இலாகா தலைமை உத்தியோகஸ்தர் ரிச்சேர்ட் பீர்ஸ் அவர்களின் வேலையைப்பற்றி புகழ்ந்து பேசினுர். இந்திய விமானப்படையின் ஒரு பகுதி போரில் காட்டிய திறமையிலிருந்து மற்ற படைப்பகுதிகளும் போரில் ஈடுபட்டவுடன் இன்னும் மகத்தான வேலைகள் செய்துமுடிக்கும் என்பதில் சந்தேகமில்லை என்றும் சொன்னுர். தங்கள் சொந்த நாடு தாக்கப்படுமேயாகில் இந்திய விமானிகள் போருக்கு அழைக்கப்படுவார்கள் என்பதைக்குறித்தே விமான இலாகாத் தலைமை அதிகாரி சொல்லியிருக்கிருர்.

பர்மா யுத்தம் ஆரம்ப காலத்தில் ஸால்வீன், பிலின் நதிக்கரைகளில் போர் நடத்திக்கொண்டிருந்த பிரிடிஷ் துருப்புகளும், இந்தியத் துருப்புகளும் அடங்கிய சைனியங்களுக்கு இந்திய விமானப்பகுதி உதவிப்படையாக அனுப்பப்பட்டிருந்தது. அதே சமயத்தில் பிரிடிஷ் விமானப்படையும், அமெரிக்க விமானப்படையும் சேர்ந்து ஜப்பானிய விமான பலத்தை முறியடித்தன. அதனுல் விமானப் போரில் நேரிட்ட வெற்றிகள் தரையிலுள்ள நம் படைகளுக்கு உற்சாகமூட்டின.

பிப்ரவரிமீ 4வ புதன்கிழமையன்றுதான் இந்திய விமானப்படையின் பெரிய தாக்குதல் நேரிட்டது. பிரிடிஷ் விமானப்படையைச் சேர்ந்த பாம்பர் விமானங்கள் இந்திய விமானப்பகுதியின் தலைவரின்கீழ், தாய்லாந்தில் விரோதி ஆக்கிரமித்த விமான நிலயங்களில் ஒன்றை மிக்க கடுமையாகத் தாக்கின. விமான நிலயத்தைச் சேர்ந்த கட்டடங்கள், நிலயம் தரையிலுள்ள விமானங்கள் யாவும் நம் விமானப்பகுதியின் முக்கிய லக்ஷியங்களாகின. ஆனுல் இந்தத் தாக்குதல்களைப்பற்றி உத்தியோக முறையில் பிரிடிஷ் விமானப்படை பர்மாவில் வெற்றிகரமாகத் தாக்குதல் நடத்தினவென்று வெளியாயிற்று.

## தாய்லாந்திற்குள்.

பிற்பட்டு ரெங்கூனை விட்டுவிட்டு அந்நகரத்திற்கு வடக்கே போரரங்கம் ஏற்படுத்திவந்த வாரங்களில் இந்திய விமானப்பகுதி தரைப்படைக்கு உதவியாக அநேகதடவைகள் வந்து, வேண்டிய உதவிகளைச் செய்தது. அநேக சமயங்களில் அதற்கு வேண்டிய சௌகரியத்தையோ இன்னும் அவசியமான பொருள்களையோ அடையமுடியாமல் போய்விட்டது. அவ்விமானிகள் கொசுக்கள் நிறைந்த வயல்களில் தங்கள் விமான இறக்கைகளின்மேல் சாய்ந்துகொண்டு தூங்குவார்கள். சாப்பாடு நிச்சயமாகக் கிடைக்கும் என்று சொல்வதிற்கில்லை. அவர்கள் ஸ்நானம் செய்வதற்குக்கூட அவகாசமில்லாமல் இருந்தது.

அங்கு நடந்த பிரக்யாதிபெற்ற தாக்குதலில் மதராஸிலிருந்து வந்த விமான உத்தியோகஸ்தர் பிரிடிஷ் பாம்பர் படையை நடத்திச்சென்ருர். அப்பகுதி இந்திய விமானப்பகுதியுடன் ஒத்துழைத்தது. பல போர்முனைகளில் விமானத் தாக்குதல்களில் ஈடுபட்டிருந்த பிரக்யாதிபெற்ற விமானிகளுக்கும், நமது இந்திய விமானிகளுக்கும் பரஸ்பர அந்நியோன்யம் ஏற்பட்டிருந்தது. தாக்குதலில் குறிப்பிட்ட லக்ஷியங்களின் பேரில் விமானிகள் தைரியமாக 500 அடிவரை கீழே இறங்கி குண்டுகள் வீசினார்கள். மோல்மீன், மார்டபான், டெயின்ஸீக், பிலின். இன்னும் பர்மாவிலுள்ள மற்ற விரோதி ஆக்கிரமித்த பிரதேசங்களில் இந்திய விமானிகள் வெற்றிகரமாகத் தாக்கினார்கள். தாய்லாந்திலுள்ள லக்ஷியங்களின் பேரிலேயே அவர்கள் பல தடவைகள் வந்து தாக்கினார்கள்.

சிங்மேயின் பேரில் இந்திய விமானப்படை படையெடுத்தபொழுது அங்கு ஏராளமாக விரோதித்துருப்புகள் இருந்தன. “ஜப்பானியத் துருப்புகளை நோக்கி நம் விமானங்கள் கீழே பாயும்பொழுது, அவர்கள் ஒன்றும் தெரியாமல் திகைப் படைந்துபோய் அங்குமிங்கும் தப்பித்துக்கொள்ள ஓட எத்தனித்தார்கள்” என்று இந்திய விமான உத்தியோகஸ்தர்களில் ஒருவர் அப்படையெடுப்பைப்பற்றி விஸ்தரித்தார். இப்படையெடுப்பு மிகவும் தீர்மானத்துடன் நடத்தப்பட்டது. குண்டுகளை வீசிவிட்டு தங்கள் விமானத் தளங்களுக்கு மீண்டும் திரும்பி வரும் பொழுது, தாக்குதல் ஏற்பட்ட இடத்திலிருந்து 1,000 அடி உயரம் வரை கருப்பும், வெள்ளையும் கலந்த புகை கிளம்பிவருவதைப் பார்த்தார்கள். மெஹாங் ஸோனின் பேரில் ஏற்பட்ட படையெடுப்பில் அங்குள்ள பொதுமக்கள் அப்புறப் படுத்தப்பட்டார்கள். இந்திய விமானப்படையை ஹரிக்கேன் விமானங்கள் பின் தொடர்ந்து சென்றன. அங்கு ஸ்தாபிக்கப்பட்டிருந்த ராணுவதளங்கள் யாவும் கடுமையாகத் தாக்கப்பட்டு தகர்க்கப்பட்டன.

விமானங்களுடன் கீழிறங்கி அங்கிருந்த விமானம் ஒன்றை அழித்துவிட்டார் கள். மற்றென்றுக்கு பலத்த சேதத்தை விளைவித்தார்கள். ரேடியோ நிலயம் பூராவும் எரிந்துகொண்டிருந்தது. அடுத்தடுத்து ஒவ்வொரு நாளும் இந்தியர்கள் விரோதி பிரதேசத்தைச்சுற்றி வேவுபார்த்து வந்தார்கள். அங்குள்ள முக்கிய லக்ஷியங்களை நேரில் பார்த்ததிலும் புகைப்படங்கள் எடுத்ததிலும் விசேஷ திறமையை காட்டியிருக்கிறார்கள். அவர்களை பர்மாவிலுள்ள ஆகாய விமானப் படைத்தலைவர் புகழ்ந்தார். தளகர்த்தர் ஆர்ச்பால்டு வேவல் ஆகாய விமானி களையும், விமானங்களிலிருந்து தூரதிருஷ்டி பார்ப்பவர்களையும் அவர்களின் திறமையான வேலைக்குப் புகழ்ந்ததில் அவர்கள் பெருமையடைந்திருந்தார்கள்.

இப்பொழுது அந்தப் படைப்பகுதி யுத்தத்தில் அடுத்த நடவடிக்கையில் பங்கெடுத்துக்கொள்ள ஆவலாக இருக்கிறது. இன்னும் மற்ற படைப்பகுதி களும் பெரிய தீரச்செயல்களில் கலந்துகொள்ள காத்துக்கொண்டிருக்கின்றன. அந்தப்படை பலம் ஆரம்பித்து ஒன்பது வருஷமானாலும் எதிர்பார்ப்பதற்குமேல் பலமிருப்பதாகத் தெரிகிறது.

# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

---

1942— மணி.

## பிரஸங்கம் 102—(4-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜூலை | ... 4, சனிக்கிழமை ... | முனிஸிபல் ஆபீஸ் | ... | மாலை | 6.30 |
| | 5, ஞாயிற்றுக்கிழமை. | நீர்ப்பழனி | ... | ,, | 6.00 |
| | | ஆலூர் | ... | ,, | 6.30 |
| | 6, திங்கட்கிழமை ... | காரையூர் | ... | ,, | 6.00 |
| | | இடையாத்தூர் | ... | ,, | 6.30 |
| | 7, செவ்வாய்க்கிழமை. | அண்டக்குளம் | ... | ,, | 6.00 |
| | | கிள்ளனூர் | ... | ,, | 6.30 |
| | 8, புதன்கிழமை ... | கீரனூர் | ... | ,, | 6.00 |
| | | நாஞ்சூர் | ... | ,, | 6.30 |
| | 9, வியாழக்கிழமை ... | வடவாளம் | ... | ,, | 6.00 |
| | | செம்மட்டிவிடுதி | ... | ,, | 6.30 |

## பிரஸங்கம் 103—(5-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| 12, ஞாயிற்றுக்கிழமை. | திருவரங்குளம் | ... | ,, | 6.00 |
| | வம்பன் | ... | ,, | 6.30 |
| 13, திங்கட்கிழமை ... | மலைக்குடிப்பட்டி | ... | ,, | 6.00 |
| | தொலையானூர் | ... | ,, | 6.30 |
| 14, செவ்வாய்க்கிழமை | குளவாய்ப்பட்டி | ... | ,, | 6.00 |
| | கீழையூர் (தெற்கு) | ... | ,, | 6.30 |
| 15, புதன்கிழமை ... | வெள்ளனூர் | ... | ,, | 6.00 |
| | செம்பாட்டூர் | ... | ,, | 6.30 |
| 16, வியாழக்கிழமை ... | பள்ளிவாசல் | ... | ,, | 6.00 |
| | பில்லமங்கலம் | ... | ,, | 6.30 |
| 17, வெள்ளிக்கிழமை... | புலியூர் | ... | ,, | 6.00 |
| | கண்ணங்குடி | ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—7-7-42.